ஜெயங்கொண்ட [illegible]

சித்திரை 1932

6 4

JL
7592 ... 211, N28
N32.6.4
158907

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

5 - JUL 19

| தொகுதி ௧ | ஆங்கீரச ௵ சித்திரை ௴ | பகுதி ௨ |
|---|---|---|

## உள்ளடக்கம்

| | |
|---|---|
| கடவுள் வாழ்த்து .... | 79 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை .... | ,, |
| கணவர்கள் கடமை அல்லது பெண்கள் நிலைமை .... | 81 |
| மாகாண வாக்குரிமை விசாரணைச் சபைக்கு அனுப்பிய குறிப்புக்கள் .... | 83 |
| சமயப் பகுதி :—இந்து தெய்வ மூர்த்த தத்துவார்த்த விளக்கம் ... | 85 |
| ஞானசாகரரது சாட்சியம் ... | 88 |
| பாமாலைப் பகுதி :—"வினா விடை" .... | 91 |
| விகடத் துணுக்குகள் .... | 92 |
| ஜீவ வதையும் தெய்வ வழிபாடாமா ? .... | 93 |
| திருப்பரங்குன்றம் ... | 94 |
| வர்த்தமானம் ... | 96 |
| வெடி மருந்து .... | 98 |
| சந்தா வரவு ... | 100 |
| கிளர்ச்சி .... | 102 |

காரியாலயம் :—2/17, பவழக்கார தெரு, சென்னை.

# செங்குந்தர் கல்விநிதி

"கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை"

பல சிறு துளி! ஒரு பெரு வெள்ளம்!!

பல்வேறு சமூகங்களும் முன்னேற்றத் துறையி லீடுபட்டு மேலோங்கி யெழப் பெரும் பாடு பட்டுவரும் இக்காலத்தில், ஏனைய சமூகங்களோடு சமமான நிலையில் நிற்றற்கும், உலகப் போட்டியிற் கலந்துகொண்டு மேன்மை யுறுதற்கும் நங்குலத்தினர் உலகப் போக்கை நன்குணர்ந்து கைத்தொழில் முதலிய பல துறைகளிலும் திறமை பெறுவது இன்றியமையாததாகும். அவ்வாறு நம்மைத் தயார் செய்துகொள்வதற்கு மற்றெல்லாவற்றினும் சிறந்த சாதனம் கல்வியேயாகும். அதுவே நமது பண்டைப் புகழினையும் அந்நிலைக்கு நேர்முரணாக நாம் தற்போது அடைந்துள்ள தாழ் நிலையினையும் கண்ணாடி போல் நமக் கெடுத்துக் காட்ட வல்லது. அம்மட்டோ? நாம் அத்தகைய தாழ்வுக் கடலினைக் கடந்து மேன்மைக் கரையினை யடைதற்கேற்ற தெப்பமாய் உதவுவதும் அதுவே. சுருங்கக்கூறின், நமது சமூகத்தினரைப் பல துறைகளிலும் முன்னேற்றி மேம்படுத்த வல்லது கல்வியே யாகும். அதனை யுணர்ந்தே நமது தலைச் சங்கத்தாரும், நமது குலச் சீர்திருத்தத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அதனை முதற்படியாகக் கொண்டு உழைத்து வருகிறார்கள்.

ஆனால், கல்விப் பொருளினை நமது மக்களிடைப் பரப்புவதற்குச் செல்வப் பொருள் பெரிதும் அவசியமாயுள்ளது. உலகத்திலேயே பேரறிஞராகத் திகழக்கூடிய பல பிள்ளைகள் வறுமையின் வாய்ப்பட்டு, அல்ல லுழன்று, பாறையில் விதைத்த செழுவிதை போன்று பெயர் தெரியாது மறைந்து கிடக்கின்றனர். அத்தகையோர் தளிர்த்துச் செழித்து, ஓங்கி வளர்ந்து, அறிவு, ஆராய்ச்சி முதலிய நறுமண மலர்களையும் தீங்கனிகளையும் உலகினர்க்குத் தந்துதவுமாறு பொருளுதவி புரிதலினும் சிறந்த தானமுண்டா? தருமந்தானுண்டா? அன்னதானம் முதலிய தானங்கள் ஒருவ ரிருவருக்கு ஒரு சமயத்தில் திருப்தியும் நன்மையும் அளிக்கலாம். கல்வி தானமோ, உலகமுழுதும் பேரொளியைப் பரப்ப வல்லதொரு ஆற்றல் சான்ற அறிவுப் பிழம்பையே உண்டாக்கினும் உண்டாக்கலாம்.

அதனாலேயே, ஏழ்மையால் வருந்தி வாடும் நங்குல மக்களுக்குக் கல்விச் செல்வத்தை வழங்குவதற்காக நமது தலைச்சங்கத்தார் செங்குந்தர் கல்விநிதி யெனும் நிதியொன்றை யேற்படுத்தி யுள்ளார்கள். அதன் உதவியைக் கொண்டு தற்போது சுமார் 30 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். அதன் பயனாக நம்மவரிடைப் பட்டதாரிகளது தொகையும் வருஷா வருஷம் அதிகரித்து வருகிறது. மேலும் மேலும் அதிகமான மாணவர்க்கு உபகாரச் சம்பளம் முதலிய உதவிகள் செய்யவேண்டுமென்பது நமது தலைவர்களது நோக்கமாக உள்ளது. வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வந்து கல்வி பயிலும் மாணவர்க்கு உண்டி, உறையுள் முதலிய வசதிகளை யளிப்பதற்காகவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆனால், இந்நோக்கங்க ளெல்லாம் நிறைவேறுவதற்கு இந்நிதி பன்மடங்காகப் பெருக வேண்டும். சுபகாரியங்களில் நன்கொடை யளித்தல், சம்பாதனையில் ரூபாய்க்குத் தம்பிடி யளித்தல் முதலிய பல வழிகளில் அதனைப் பெருக்க வேண்டுமெனவும் நமது மகாநாட்டில் தீர்மானம் நிறைவேறியுள்ளது. பல புண்ணிய சீலர்களும் அவ்வழிகளில் தாராளமாக வழங்கிக்கொண்டு வருகிறார்கள். ஆயினும் கல்விநிதி போதிய அளவு விருத்தியடைவதற்கு நன்கொடைகள் இன்னு மதிகமாக வழங்கப்படல் வேண்டும்.

ஆகவே, செல்வச் சீமான்களே! குலாபிமானிகளே!! உங்கள் சோதரர்கள் மேன்மையடைய வேண்டுமானால், நமது குலம் மேலோங்க வேண்டுமானால், நாமும் நமது முன்னோரைப் போன்று வீரர்களாய், அறிஞர்களாய், கைத்தொழில் நிபுணர்களாய், சீர்குலத் தோன்றல்களாய்த் திகழ வேண்டுமானால் நமது கல்விநிதிக்கு,

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் லருளீர்! ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!

---

கல்விநிதிக்கு நன்கொடை யனுப்புவோர்,
திரு. மா. பா. கந்தசாமி முதலியார், B. A., B. E.,
அமைச்சர், செங்குந்தர் கல்விநிதி,
'காமாக்ஷி விலாசம்', போஸ்டல் காலனி, மாம்பலம்,
தேனாம்பேட்டை P. O., சென்னை என்னும் விலாசத்துக்கு அனுப்பவும்

---


# செங்குந்த மித்திரன்

330

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி—௬] ஆங்கீரச ஹு சித்திரை மீ [பகுதி—௧


## கடவுள் வணக்கம்

பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுது கண்டேன் செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரை புரளும் பரமானந்த சாகரத்தே. (கந்த ரலங்காரம்)

---

# பத்திரிகாசிரியர் முன்னுரை

## எல்லோரும் ஒன்றாய் யோசிப்போம்

உலகமெங்குமே பணநெருக்கடி யென்னும் கூக்குரல் காதைச் செவிடுபடுத்துகிறதாயினும், நங்குல மக்களிடைத்தான் அது அபரிமிதமான இன்னல்களைப் புகுத்தியுள்ள தென்று எண்ணவேண்டியிருக்கிறது. யந்திரங்களைக் கொண்டு ஆச்சரியப்படத்தக்கபடி அவ்வளவு துரிதமாகவும், அதிகமாகவும் நாளுக்கு நாள் புதுமாதிரியான ஆடைகள் உற்பத்தி செய்யப்படும் இக்காலத்தில் பழைய கைத்தறியின் பெருமைகளெல்லாம் மறைந்தொழிய, அதன் வாயிலாக ஜீவனம் தேடும் மக்களும் வறுமையின் வாய்ப்பட்டு வாடுகின்றன ரென்பதில் ஆச்சரியமில்லை. இத்தகைய யந்திரப் போட்டி மட்டுமன்றி ஜவுளி வியாபாரிகளது அடாவடித்தனமும் ஏழை நெசவாளரை அல்லற் படுகுழியிலமிழ்த்தி வருகின்றது. நவநவமான துணிகள் சரசமான விலைக்குக் கிடைப்பதால் பழைய மாதிரி யானவற்றை வாங்க மக்கள் முன் வருகிறார்களில்லை. அப்படி வாங்க எண்ணுவோரும் அவற்றை மிகமிகக் குறைவான விலைக்கே கேட்கின்றனர். பெருமிதமான அளவில் துணிகள் உற்பத்தி யாவதையும் கைத்தறி நெசவாளர்க்குள்ளேயே போட்டி மலிந்து கிடப்பதையும் உணரும் ஜவுளி வியாபாரிகளோ அத்துணிகட்குத் தமக்கிஷ்டமான விலையே கொடுக்கின்றனர். ஆகவே, சில சமயங்களில் நூல் முதலியவற்றிற்குச் செலவான பணமுங் கிடைப்பது துர்லபமாகிறது. இக்காரணங்களால், பாரம்பரியமாக நெசவுத் தொழில் செய்துவரும் ஆயிரக்கணக்கான மக்கள் இரவு பகலாக ஓய்வு சாய்வின்றி உழைத்து, உழைப்புக்குத் தக்க ஊதியம் பெறாது முழுவயிற்றுக் கஞ்சியுமின்றித் திண்டாடுகிறார்கள்.

இத்தகைய பணக் கஷ்டத்தை யொழிப்பதற்கு ஏதாவது வழியுண்டாவென ஆராய்வது மிகவும் அத்தியாவசிய மாகின்றது. இவ்வாறு ஆராயும் பொருட்டுத் திருநெல்வேலிச் செங்குந்தர்கள் முன் வந்துள்ளார்கள் என்பது எமக்கு ஒருவாறு திருப்தியையே அளிக்கின்றது. திருநெல்வேலி நகரத்தில் ஆயிரவருக்கு மேற்பட்ட செங்குந்தர்கள் வதிகின்றனர். அவர்களனைவரும் பாரம்பரியமாகக் கைத்தறி நெய்து வருபவர்கள். துரிதமாகத் துணிகளை நெய்யும் பொருட்டுச் சில வருஷங்களுக்கு

முன்னர் தான் அவர்கள் பழைய குழித்தறியை விட்டுவிட்டு நாடாக்களை வேகமாகச் செலுத்தும் "விசைத் தறி"யைக் கைக்கொண்டார்கள். ஆனால் தற்போது, இப்புதுத் தறியினால் விற்கக் கூடிய அளவுக்கு மேல் துணிகள் உற்பத்தியாகின்றன வென்பதுபற்றியும், அதனால் மிகச் சொற்பமான லாபமே கிடைக்கிற தென்பது பற்றியும், வேறு சில காரணங்களாலும் அதனை விட்டுவிட்டுப் பழையபடி குழித் தறியையே கைக்கொள்ள வேண்டுமென எண்ணங் கொண்டுள்ளார்கள். அவ்வாறு செய்வது நன்மை பயக்குமா என்பதை ஆராய்வதற்காக, ஏப்ரல் மாதம் 15-ந் தேதி திரு. S. பழனியாண்டி முதலியார், பி. ஏ. அவர்கள் தலைமையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொகையினர் அடங்கிய மாபெருங் கூட்டமொன்று நடந்தது. இரண்டு நாட்கள் இதைப்பற்றி விவாதித்த பின்னர், "விசைத் தறி"களை விட்டுக் குழித் தறிகளில் நெய்வதே பணக் கஷ்டத்தைப் போக்குதற்கான வழி யென்றும், ஆகவே மே மாதம் 13-ந் தேதி முதல் செங்குந்த ரனைவருமே அவ்வாறு செய்தல் வேண்டுமென்றும், இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டு "விசைத் தறி"களை விட்டுவிடுமாறு அந்த ஜில்லாவில் வீரவ நல்லூர், அம்பாசமுத்திரம், தென்காசி முதலிய இடங்களிலுள்ள செங்குந்த ரனைவரையும் வற்புறுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

"விசைத் தறி"களால் அதிகமான துணிகள் உற்பத்தியாகின்றன என்பதும், உற்பத்தி அதிகமாக ஆக, அவற்றின் விலை குறைகிறதென்பதும் வெளிப்படையாகத் தெரியும் உண்மைகளாயினும், தீர்மானிக்கப்பட்ட முறை சரியானது தானா, அனுபவத்தில் அது நன்மை யளித்துப் பண நெருக்கடியைப் போக்கவல்லது தானா என்பது சந்தேகத்துக் கிடமானதாகவே யிருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி ஏனைய செங்குந்தர்களது அபிப்பிராயத்தையும் அறிவது இன்றியமையாததாகும்.

யந்திரங்களோடு போட்டியிட வேண்டி யிருக்கும் இக்காலத்தில் கைத்தறிகளி லுண்டாகும் உற்பத்தியைப் பின்னுங் குறைப்பது சரியான முறைதானா என ஒரு கேள்வி யெழுகின்றது. இத்தகைய போட்டி மிகுந்த ஒரே கைத்தொழிலை ஒரு சமூகத்தின ரனைவரும் கைக்கொண்டு அதன் வாயிலாகவே தங்கள் ஜீவனத்தைத் தேடிக்கொள்ள முயல்வதும் தற்காலத்துக் கேற்றதுதானா என்னும் கேள்வி யொன்றும் எழுகின்றது. ஜாதிப் பாகுபாடுகளும், ஒரு ஜாதியார் ஒரு தொழிலையே செய்து வரும் வழக்கமும் நாளுக்கு நாள் மறைந்து வருகின்றன. பிராமணனும் தோல் வியாபாரம் செய்கின்றான்; ஆதித்திராவிடனும் கலைகளோதுகின்றான். செட்டிகளும் உழவு வேலை செய்கிறார்கள்; முதலியார்களும் வர்த்தகம் செய்கிறார்கள். இவ்வாறு காலத்துக் கேற்றபடி வழக்கங்களையும் தொழில்களையும் மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாயுள்ளது. அவ்வாறு செய்வதனாலேயே போட்டியாலேற்படும் தீமைகளுங் குறைகின்றன. மேலும் ஒரு ஜாதியார் ஒரே தொழிலைச் செய்வதால் அவர்கள் மற்ற தொழில்களிற் பரிச்சிய மற்றவர்களாவதுடன், தாங்க ளுற்பத்தி செய்யும் பொருள்கள் போக மற்றவற்றிற்கெல்லாம் பிறரையே எதிர்பார்த்து நிற்கவேண்டி யிருக்கிறது. பின்னும், ஒரு குடும்பத்திற் பிறக்கும் பிள்ளைகளனைவரும் ஒரே மாதிரித் திறமையும் ஆர்வமும் உடையவர்களா யிருப்பதை நாம் காண்கிறோமில்லை. உதாரணமாக, ஒரு செங்குந்த குடும்பத்திலுள்ள நான்கு பிள்ளைகளில் ஒருவனுக்குக் கல்வியில் விருப்பமிருக்கலாம்; ஒருவன் சிற்பத்தில் கெட்டிக்காரனா யிருக்கலாம்; ஒருவன் யந்திர வேலைகளில் நிபுணனா யிருக்கலாம்; ஒருவன் தறி வேலையில் சமர்த்தனாகவும் இருக்கலாம். இவர்களனைவரையும் நெசவுத் தொழிலிலேயே பழக்குவதால் அதில் விருப்பமும் திறமையுமில்லாத முதல் மூவரும் அறிவு மங்கித் தமக்கு இயற்கையா யமைந்த திறமையையு மிழந்து தாங்கள் கட்டாயத்தினால் மேற்கொண்ட தொழிலிலும் திறமை யற்றவர்களாகிக் கஷ்டப்பட நேருகிறது. இதை யுணர்ந்தே மேல் நாடுகளில் சிறுவர்களது திறமையையும் ஆர்வத்தையு மாய்ந்து அவரவர்க் கேற்ற வழியில் அவரவரைப் பழக்குகின்றனர். இவற்றை யெல்லாம் நோக்கும்பொழுது நங்குல மக்கள் ஒரே தொழிலையே தங்கள் ஜீவனோபாயமாகக் கொள்ளாது பல துறைகளிலும் புகுந்து அவரவர் திறமைக்கும் வசதிக்கு மேற்ற தொழில்களை 'மேற்கொள்வது' உசிதமல்லவா வெனத் தோன்றுகிறது.

இத்தகைய கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் கூறுவது ஒருவராலே ஒரு நிமிஷத்தில் இயலாததாகும். பலரது அபிப்பிராயங்களை ஒருங்கே ஆராய்ந்து ஒவ்வொன்றிலுமுள்ள நன்மை தீமைகளைத் தேர்ந்தெடுத்து அதன் பின்னர் ஒரு முடிவுக்கு வருவதே சிறந்த முறையாகும். அவ்வாறு நங்குல மக்களது அபிப்பிராயங்களை யெல்லாம் ஒன்றுசேர்க்கவும், அவற்றை அனைவர்க்கும் தெரிவிக்கவும் நமது மித்திரனே தக்க சாதன மாகையால் இவ்விஷயத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கென நமது பத்திரிகையில் சில பக்கங்கள் ஒதுக்கி வைக்க எண்ணியுள்ளோம். நங்குலச் சீர்திருத்தத்திலும் முன்னேற்றத்திலும் ஊக்கங் கொண்டுள்ள அறிஞர்கள் பொதுவாக நங்குலத்தின் தொழிலைப்பற்றியும், சிறப்பாகக் குழித்தறியைக் குறித்துத் திருநெல்வேலிச் செங்குந்தர் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப்பற்றியும், நங்குலத்தினரது ஏழ்மையைப் போக்குதற்கான வழிகளைப்பற்றியும் தாம் தாம் ஆராய்ந்து தெளிபவைகளை நமது பத்திரிகையிற் பிரசுரிப்பதற்காக அனுப்புவாரென எண்ணுகிறோம். அத்தகைய அபிப்பிராயங்கள் கலப்பின் பயனாக ஒரு சிறந்த முடிவும் நற்பயனும் ஏற்படுமெனவும் நம்புகிறோம்.

158987



# கணவர்கள் கடமை அல்லது பெண்கள் நிலைமை

[திரு. K. ஆறுமுக முதலியார் அவர்கள், இரங்கூன்]

கணவர்கள் கடமை என்பது யாது? கணவர்கள் கடமை இதுதானெனக் கூற இயலாதவர்களே நம் நாட்டிற் பெரும்பாலோ ரிருக்கின்றனர். கணவர்களது உண்மையான கடமையை நமது நாட்டு மக்கள் வெகு காலத்திற்கு முன்பே மறந்து விட்டனர். கணவர்களென்றால் என்னவென்று கேட்போமாயின் கல்யாணம் செய்துகொண்டவர்கள் கணவர்கள் என்றே நம்மில் சிலர் பொருள் கூறுவர். கல்யாணம் செய்துகொண்ட எல்லோரும் கணவர்கள் தாமோ? விவாகஞ் செய்துகொண்ட ஒருவன் தன்னுடைய பொறுப்பு இன்னதென்று அறிந்து அறிந்த அவ்வழியில் செல்வானாயின் அவனே கணவன். ஒரு பெண்ணை மணந்துகொண்டு மக்களைப் பெறுவது தான் கணவனது கடமை யாகுமென்று கூற முன் வருகிறவர்களு மிருக்கலாம். சிலர் பல வழிகளிலும் பொருளைத் தேடித் தம் மனைவி மக்களைக் காப்பதே கணவர்கள் கடமை யாகுமென்று கூறலாம்; சிலர் மனைவி விரும்புகிறபடி நடந்து அவளை மகிழ்விப்பதே கணவர்கள் கடமையாகுமெனலாம்; சிலர் பல வகையிலும் மனைவியிடத்தில் அன்பு செலுத்துவதே கணவர்கள் கடமையாம் என்று சொல்லலாம். மனைவி நியாயமுள்ள விஷயத்தையும் விரும்பலாம், நியாயமில்லாத விஷயத்தையும் விரும்பலாம். உலகத்தார் ஒப்பாத விஷயத்தை மனைவி விரும்புவாளாயின் அவள் விருப்பத்திற் கிணங்கி அவள் விரும்பும் விஷயத்தில் துணையாக நிற்பதுந் தருமந்தானோ?

நமது நாட்டிலுள்ளவர்களிற் பெரும் பகுதியோர் தமது கடமைகளை மறந்து பழங்கதைகளைப் பேசிப் பேசிக் காலங் கழிப்பதில் கெட்டிக்காரர்களென்பதிற் சந்தேகம் கிடையாது. வீண் பெருமை பேசி நாளைக் கழிப்பதில் நம் நாட்டினர் வேறு எந்நாட்டாருக்கும் பின்வாங்க மாட்டார்களெனலாம். மேலும் எவ்வகையிலும் நமக்குச் சமத்துவமுள்ள நமது மனைவிமார்களைத் தாழ்ந்தவர்களென்று நினைத்து அதற்கேற்றபடி அவர்களை நடத்தலானோம். மனைவிமாராயுள்ள நமது பெண்மணிகளைப்பற்றியோ யாதும் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் எப்படிப் புடவை கட்டிக்கொண்டால் காண்போர் மதிப்பார்கள்? இரவிக்கை ஜாக்கெட்டு இவைகளில் எதை எவ்வாறு தைத்து அணிவது? எப்படித் தலைவாரி வாகு எடுத்து முடிவது என்பதிலேயே அதிக கருத்துடையவர்களாக இருக்கின்றனர். இத்தகைய மூடமயக்கத்தி லீடுபட்டுள்ள பெண்மணிகளின் புருஷர்களோ குடுமி வைத்துக்கொள்வதா? கிராப் செய்துகொள்வதா? தனிமையாக மனைவியோடு இருக்கலாமா? எப்படி நடந்துகொண்டால் நம்மை நாகரிக முடையவரென்று பார்ப்போர் சொல்லுவார்கள்? என்பன போன்ற விஷயங்களில் கருத்தைச் செலுத்திக் காலங் கழிக்கின்றனர். இத்தகைய அறிவாளிகளால் இவ்வுலகில் அநேகம் தீமைகள் உண்டாகின்றன வென்றே சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு ஆண்மகனும் தன் கடமையைச் சரிவரச் செய்வானாயின் நமது நாடு கூடிய விரைவில் முன்னேற்ற மடையுமென்பது திண்ணம். ஒரு குடும்பத்திலுள்ள பலரும் தங்கள் கடமையை அறிந்து அதற்கேற்றவாறு நடப்பார்களாயின் அக்குடும்பம் முன்னேற்றமடையு மென்பதிற் சந்தேகமே கிடையாது. அவ்வாறு பல குடும்பங்கள் முன்னேற்ற மடையுமானால் ஒரு கிராமமும், பல கிராமங்கள் முன்னேற்றமடையுமானால் ஒரு ஜில்லாவும், பல ஜில்லாக்கள் முன்னேற்றமடையுமானால் ஓர் இராஜதானியும், பல இராஜதானிகளும் முன்னேற்றமடையுமானால் ஒரு தேசமும் தடையின்றி முன்னேற்றமடையும். எந்தத் தேசத்தில் ஸ்திரீகளும் புருஷர்களும் தங்கள் கடமைகளை அறிந்து அதற்கேற்ற வழியில் நடக்கின்றார்களோ அந்தத் தேசமே விரைவில் முன்னேற்ற மடைகின்றது. தன் கடமையை அறிந்து நடப்பவனே கணவனாவான். அறிவற்றவர்கள் கல்யாணம் செய்துகொண்டால் தங்கள் கடமையை அறிந்து எவருக்கும் ஏற்ற விதமாக நடப்பார்களா? ஒருவன் படித்துவிட்டதனாலும், தகுந்த வயதை யடைந்துவிட்டதனாலும் கல்யாணம் செய்துகொள்வதற்கு அருகனாவானா? படித்தவர்களிலும் அறிவற்றவர்களுண்டு. வயதானவர்களிலும் மூடர்களிருக்கவே இருக்கின்றனர். ஆகையால் அறிவுள்ளவர்களே கணவன் என்னும் பெயரை வகிப்பதற் கேற்றவராவர்.

தற்காலத்தில் நமது இந்திய நாட்டில் நடக்கும் கலியாணங்களின் சீர்கேட்டைப்பற்றி எவராலும் எழுதமுடியாது. பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எப்படியேனும் கலியாணம் செய்ய முயற்சிக்கின்றனர். அவர்கள் கவனிப்பதெல்லாம் மருமகள் பணக்காரன் பெண்ணாக இருக்கவேண்டும், மருமகன் பணக்காரனாக இருக்கவேண்டும் என்பதே யாம். தாய் தந்தையர்கள் தங்கள் மருமகனும் மருமகளும் அறிவுடையவர்களாக இருக்கவேண்டு மென்பதையே முக்கிய நோக்கமாகக் கொள்ளவேண்டும். மற்ற விஷயங்களை அதற்குப் பின்னரே கவனிக்கவேண்டும். அறிவுடைய மருமகனையும் மருமகளையும் தேடிக்கொள்ளும் தாய் தந்தையர்களே புத்திசாலிகளும் புண்ணிய சீலர்களுமாவார்கள். புத்திசாலிகளான மருமகளும் மருமகனுமே கணவன் மனைவி என்னும் பெயருக் குரியவர்களாவார்கள். அவர்களுக்காகக் கணவர்களின் கடமை என்றும் மனைவியின் கடமை என்றும் கட்டுரை எழுதவேண்டிய அவசியமில்லை. தனவந்தர்கள் வீட்டிற் பிறந்த பிள்ளை

களா யிருந்தாலும் அவர்கள் நல்லறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களாய்த் தமக்கிருக்கும் பொருளைக் காப்பாற்றி விருத்திசெய்யக் கூடியவர்களானால் அப்பொழுதுதான் அவர்களுக்கு விவாகம் செய்து வைக்கவேண்டும். அவ்வாறன்றித் திரண்ட செல்வத்தை மட்டும் பெரிதென் றெண்ணி அவர்களுக்கு விவாகம் செய்து வைப்பது பெரும் பிசகாகும்.

தாய் தந்தையர் தம் மக்களுக்கு ஏற்ற பெண்ணையும் பிள்ளையையுமே தேடி மணம் செய்து வைக்கவேண்டும். நாற்பது வயது சென்று நரைத்தவர்களுக்குப் பத்துப் பன்னிரண்டு வயதுடைய பெண்ணையும், பருவமடைந்து பல மாசங்களையோ பல வருஷங்களையோ கடந்த பெண்ணுக்குப் பதினறு வயது பையனையும் மணம் செய்து வைப்பது மதியீனமாகும். அழகும் புத்தியும் உள்ள பிள்ளைக்குப் பண ஆசை கொண்டோ வேறு எக்காரணங் கருதியோ அழகு அறிவு முதலியன இல்லாத பெண்ணையும், அறிவும் அழகும் உடைய பெண்ணுக்கு மூடனும் குரூபியுமான பிள்ளையையும் தேடி மணம் செய்து வைத்தலும் தகாது. அப்படிச் செய்யின் கணவனும் மனைவியும் பெரும்பாலும் தம்முள் ஒற்றுமை இல்லாமலே இருப்பார்கள் என்பது உண்மை.

விவாகமான பின்னர் கணவன் எவ்வகையிலும் மனைவி தனக்குச் சமமானவளென்று எண்ணி அவளைக் கௌரவமாகவே நடத்தி வரவேண்டும். நமது நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த நந்தமிழ் மக்கள் பெண்களுக்குச் சம உரிமை கொடுத்திருந்திருக்கின்றார்கள். காலஞ் செல்லச் செல்ல, வடக்கிலிருந்து வந்தவர்களுடைய காற்று நம்மீது படப்பட, அவர்களுடைய வழக்கவொழுக்கங்களிற் பல நம்மிடம் குடிபுகுந்துவிட்டன. அவ்வாறு நம்மிடம் குடிபுகுந்த விஷயங்களில் பெண்களை அடிமைகளாக வெண்ணிப் பிள்ளை பெறும் யந்திரங்களாக அவர்களை மதித்து வருவதும் ஒன்றாகும். கணவன் தன்னைத் தன் மனைவி மதிக்கவேண்டுமென்று நினைப்பது போலவே தானும் தன் மனைவியை மதித்து நடத்தவேண்டுமென்று நினைக்கவேண்டும். ஆண் பிள்ளைகள் எப்படி இருந்தாலென்ன? பெண்கள் தான் ஒழுக்கமுடையவர்களாகவிருக்கவேண்டுமென்று அநேகர் கூறுவதுண்டு. மனைவி கற்புடையவளாக இருக்க வேண்டுமென்று விரும்பும் கணவன் தானும் ஒழுக்கமுடையவனாய் இருக்கவேண்டியது அவசியமல்லவா? காதன் மனையாளைக் கஞ்சிக் கலையவிட்டுக் கணிகையரோடு காசி யாத்திரை போகும் காமுகர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். தன் மனையாளைத் தனிமையா யிருத்திப் பிறர் மனைக்கேகும் பேதையும் பதரே என்று கூறியது மிகவும் உண்மையேயாகும் அந்தோ இத்தகைய அறிவற்ற கணவர்களை மணந்துகொண்ட பெண்களின் கதி என்னவாகும்? சொல்லவும் வேண்டுமோ? பெண்கள் கெட்டுப் போவதற்கும் கெடாமலிருப்பதற்கும் கணவர்களே காரணமாவார்கள் என்பது பெரும்பாலும் உண்மைதான். ஒழுங்கீனமான வழியில் தங்கள் இஷ்டம் போல நடக்கும் கணவர்களிடம் மனைவிமார்கள் எவ்வாறு காலந் தள்ளுவார்கள்? சகோதரர்களே! நாம் முற்றிலும் கேவலமாக நடந்துகொண்டால் நம் மனைவிமார்கள் பொறுமையுடனிருப்பார்களா? மனைவி அறிவற்றவளாய் இருந்தாலும் கணவன் அறிவுடையவனா யிருந்தால் அவன் அவளைக் கொஞ்சமாவது திருத்திக்கொள்ளக்கூடும். அவ்வாறன்றிக் கணவனும் மூடனாய் மனைவியு மப்படியாயின் கதியேது வாழ்வேது காண்? விவாகம் செய்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு ஆண் மகனும் தன் விருப்பத்திற்கேற்ற பெண்ணைத் தேடி மணந்துகொள்ளவேண்டும். எவரும் தன் கடமை, பொறுப்பு இன்னதென நன்கறிந்துகொள்ளும் வரை —அதாவது இளைஞர்கள் 20 வயது வரையிலும், பெண்கள் 15 வயது வரையிலுமாவது பிரமசரியத்தை அனுசரிக்கவேண்டும். ஏற்ற வயதில் வாலிபர்களுக்கு மணஞ்செய்ய வேண்டுமென்ற விருப்பமிருப்பின் அவர்களுடன் ஒத்து மணவாழ்க்கையை நடத்தும் பெண்ணைத் தேடி விவாகம் செய்து வைக்கவேண்டியது பெற்றோர்களின் கடமையே யாகும். பெண் மக்களிற் பெரும்பாலோர் கல்வி இல்லாக் குறைவால் நாளுக்கு நாள் பாதளத்தை நோக்கிச் செல்கின்றார்கள். ஆண் பெண் இரு பாலாரும் கருத்தொருமித்து இல்லறம் நடத்தவேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு மணம் என்னும் விழாவினால் சேர்த்து வைக்கப்படுகின்றோம். ஆனால் தற்போதைய நிலையில் இருவரும் வாழ்நாள் முழுதும் துன்பத்தி லீடுபட்டு அல்லலுறுகின்றனர். ஆகையால் ஆண் மக்களுக்குக் கல்வி முதலிய பல கலைகளிலும் போதிய தேர்ச்சி யளிப்பது போலப் பெண்மணிகளுக்கும் கல்வி முதலியவற்றைப் புகட்டுவது பெற்றோர்களின் முதற் கடமை எனக் கொள்ளுதல் வேண்டும்.

மனமொத்த அன்பொடு நடத்தும் இல்லறமே நல்லறமாகு மென்பதையும், அத்தகைய தம்பதிகளே இம்மை மறுமை நலன்களை எய்தவல்லாரென்பதையும் மக்கள் நன்குணர்ந்து அதற்கேற்பத் தங்கள் வாழ்க்கையினைச் சீர்படுத்திக்கொண்டு இன்புறுவார்களாக!

சுபம்! சுபம்!! சுபம்!!!

## சைதாப்பேட்டை திருக்காரணி காரணீசுவரர் பிரம்மோத்ஸவம்

சென்னைக் கடுத்த ஸைதாப்பேட்டையில் விளங்கும் மாவன க்ஷேத்திரமென்னும் காரணீச்சுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசோர்ணாம்பிகை சமேத காரணீஸ்வர சுவாமிக்குப் பிரசோற்பத்தி௵ பங்குனி௴ 29௳ முதல் ஆங்கீரஸ௵ சித்திரை௴ 9௳ வரை மகோற்சவம் விமரிசையாக நடைபெற்றது.

பத்து தினங்களிலும் இரவில் திருவாளர் தேவாரம் அப்பாதுரை ஆச்சாரியார் அவர்களால் இசைக் கருவிகளுடன் தேவார பாராயணம் நடைபெற்றது.



# மாகாண வாக்குரிமை விசாரணைச் சபைக்கு (The Provincial Franchise Committee) அனுப்பிய குறிப்புக்கள்

சட்டசபைகளின் அமைப்புக்களில் கையாளப் போகும் வாக்குரிமை (Franchise) முறையைப்பற்றித் தங்களபிப்பிராயங்களை வெளியிடுதற்குத் தமக்கொரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதற்காகத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாக சபையார் பெரிதுங் கடமைப்பட்டுள்ளார்கள். அது பற்றிய கேள்விகளையெல்லாம் ஆழ்ந்தாராய்ந்ததன் பயனாக, எல்லா ஜாதிகளிலும் சமூகங்களிலும் வயது வந்தவ ரனைவர்க்கும் வாக்குரிமை (Adult suffrage) யளிக்க வியலாமலிருக்கும் இந்நிலையில், சில பாதுகாப்புக்களுடன் 'குடும்பத் தொகுதி'யே (Family unit) வாக்குரிமையின் அடிப்படையாயிருத்தல் வேண்டுமென இச்சங்கம் அபிப்பிராயப்படுகிறது. அதாவது பிரிந்தோ பிரியாமலோ இருக்கும், ஆனால் தனிப்பட வாழும், ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனது தலைவன் மூலம் உபயோகப்படுத்தப்படக்கூடிய வாக்குரிமை யிருக்கவேண்டுமென்பதையே அது குறிக்கிறது. (பெண்கள் வாக்குரிமை இங்குக் குறிக்கப்படவில்லை.) இந்த முறையால் நகரத்திலோ கிராமத்திலோ இருக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வாக்குரிமை (single vote) ஏற்படுமென்றும், ஒரு சாதாரண குடும்பத்தில் 6, 7 நபர்க ளிருப்பராகையால் சுமார் நூற்றுக்கு 13 அல்லது 14 பேர் வாக்குரிமை பெறுவரென்றும் அது நம்புகிறது. கிரீஸிலும், ரோமாபுரியிலும் மட்டுமன்றிப் பண்டைய இந்தியாவிலும் குடும்பமே அரசாங்க அமைப்பின் மூலாதாரமா யிருந்தமையும் இவ்வபிப்பிராயத்தை ஆதரிக்கின்றது. தகப்பனே—குடும்பத் தலைவனே—தனியாகக் குடும்பத்தின் விஷயங்களனைத்திலும் எல்லா உரிமைகளையும் அனுபவித்து வந்தானென்பதன் அம்சங்களை இன்னும் தாயபாகச் சட்டத்திற் காணலாம். கிராமச் சபையில் அவனுக்கே வாக்குரிமை யுண்டு. அரசாங்க விஷயங்களில் அவனே குடும்பப் பிரதிநிதி. இம்முறையால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வாக்குரிமை யேற்படுவதாலும் இராஜீய விஷயங்களில் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் ஏற்படுவதாலும் இது தகுதி யுடையதே யாம்.

## I. விடைகள்

(a) வாக்குரிமையை அதிகப்படுத்துவதற்குக் குடும்பத் தொகுதியே சரியான அடிப்படையென்றும் அதனால் (பெண்கள் நீங்கலாக) சுமார் நூற்றுக்குப் பதினான்கு பேருக்கு உரிமை கிடைக்குமென்றும் நாங்கள் கருதுகிறோம்.

(b) அத்தகைய வாக்காளர் சரியாக வாக்களிப்பாரெனக் கருதுகிறோம்.

(c) அத்தகைய வாக்காளர் தொகுதி சரியாக வேலை செய்யுமென்பது, பஞ்சாயத்துச் சபைத் தேர்தல்களிலும், ஜில்லா நகர சபைகளிலும், வேறு உள்ளூர்ச் சபைகளிலும், ஆலய நிருவாக சபைகளிலும் அனுஷ்டிக்கப்படும் முறைகள் செவ்வனே நடைபெற்று வருவதால் விளங்குகிறது.

(d) இக் கேள்விக்குப் பதில் வேண்டா.

(e) குடியாட்சி முறையிற் போல ஜனங்களுக்குத் துரைத்தனத்தில் உண்மையான வாக்குரிமையை அளிப்பதால் அது விரும்பத் தக்கதாகவும் கையாளப்படக் கூடியதாகவு மிருக்கிறது. வயது நிரம்பியவ ரனைவர்க்குமே வாக்குரிமை யளிப்பதால் வாக்காளர் தொகுதி பெருகும். ஆனால் அதை 5 வருஷங்கட்குப் பிறகு கைக்கொள்ளலாம். அதற்குள், கட்டாயம் பயன்படக்கூடிய குடும்பத் தொகுதி முறையைச் சிறிது கையாண்டு பார்க்கலாம்.

(f) குடும்பத் தொகுதி ஜனங்களில் மிகப் பெருந்தொகையினர்க்கு வாக்குரிமை யளித்துவிடும் என்பது பற்றி ஆதரிக்கப்படும் கூட்ட முறை (Group system) யை நாங்கள் விரும்பவில்லை.

(g) வயது நிரம்பியவ ரனைவரையும் ஒன்று சேர்க்கும் இம்முறை கையாளப்படக்கூடியதல்ல. மேலும், ஆங்காங்கே செல்வாக்கு மிகுந்திருக்கும் சிலர் கூட்டத் தேர்தல்களை இஷ்டப்படி நடத்தவும் அது இடந்தருகிறது.

## II. வாக்குரிமையின் வரையறைகள்

(a) இந்த வரையறைகளைக் கையாளுவதில் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் வித்தியாசமிருக்கிறது. கிராமக் குடும்பத்தையும் நகரக் குடும்பத்தையும் ஒருநிலைப்படுத்தி ஒன்றுக்கு ஒரே வோட்டைக் கொடுப்பதால் குடும்பத் தொகுதி முறை இந்த வித்தியாசத்தைத் தீர்க்கும்.

(b) மாகாண சட்டசபையில் குறைந்தது இரண்டு ஸ்தானங்களாவது எங்கள் செங்குந்த (கைக்கோள) சமூகத்துக்கு ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென நாங்கள் விரும்புகிறோமாயினும், சமூகவாரியான தேர்தல்கள் சரியானவை யல்லவெனக் கருதுகிறோம். ஆனால் 5 வருஷங்கட்கு, தாழ்த்தப்பட்டார் மற்ற வாக்காளரோடு கலக்குமாறு அவர்கட்குப் போதிய ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கலாம். முகம்மதியருக்கும் சீக்கியருக்கும் தனித் தொகுதி யளிப்பதுகூட தற்காலிக முறையாகவே இருக்கவேண்டும்.

(c) சொத்துடைமையைக் கொண்டு தகுதியை நிர்ணயிக்கலாமாயினும், அநேகமாகப் பிறப்பு வாரி

லாகவும் அதிர்ஷ்ட வசமாகவுமே அநேகர் செல்வந்தரா யிருக்கின்றனர்.

தற்போதுள்ள முறையில் நாங்கள் கீழ்க்காணும் மாறுதல்களை விரும்புகிறோம்:—

சென்னை நகர்: சொத்து, உத்தியோகம், கம்பெனி, வருவாய் இவற்றின்மீது வரி கொடுப்பவன் அல்லது வருஷத்துக்கு 24 ரூபாய்க்குக் குறையாத குடிக்கூலி அளிக்கக்கூடிய வீட்டிற் குடியிருப்பவன்.

ஜில்லா நகரங்கள்: ஏதோ ஒரு குடிக்கூலி தரும் குடித்தனக்காரன் அல்லது வருவாய் வரி தருபவன்.

கிராமாந்தரங்கள்: ஏதோ ஒரு கிஸ்தி கட்டும் நிலச்சுவான்.

(d) சர்வ கலாசாலைக்கு ஒதுக்கி வைக்கப்பட வேண்டி இரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்க ஒவ்வொரு பட்டதாரிக்கும் வாக்குரிமை இருக்க வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம்.

(e) ராணுவ ஊழியம் முதலியவற்றைக் கொண்டு தற்போது தகுதியை நிர்ணயிக்கும் முறையை நாங்கள் விரும்பவில்லை.

## III. பெண்கள் வாக்குரிமை

(a) குடும்பத் தலைவனுக் கிருப்பதுபோலவே குடும்பத் தலைவிக்கும் (சிறப்பாகத் தலைவனது மனைவி) ஒரு வோட் இருத்தல் வேண்டும். அவள் 21 வயதுக்கு மேற்பட்டவளா யிருத்தல்வேண்டும். பெண்ணே குடும்பத்தின் தலைமை யதிகாரியா யிருந்தாலும் அவளுக்கு ஒரே வோட்தான் உண்டு. இதனால் நூற்றுக்குப் பின்னும் 13 அல்லது 14 பேர் உரிமை பெறலாம். ஆண் பெண் இருதாரத் தலைவர்களும், வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்படு முன் தங்கள் உரிமையைக் குடும்பத்தில் 21 வயதுக்கு மேற்பட்ட வேறெவருக்காவது (ஆணோ பெண்ணோ) மாற்றலாம்.

(b) தொந்தரவளிக்கும் கூட்ட முறையை நாங்கள் ஆதரிக்கவில்லை.

## IV. தாழ்த்தப்பட்ட ஜாதியார்

நியமன முறை வெறுக்கத் தக்கதுதான். ஆனால் அதற்குப் பதிலாகச் சமூக வாரியாகவே தேர்ந்தெடுப்பதும் மேலானதாகத் தோன்றவில்லை. அதனால்தான் சமூகவாரி உரிமையை நாளாவட்டத்தில் ஒழிக்கப் போதிய முயற்சி செய்யவேண்டும். ஆனால் தற்காலிகமாக, தாழ்ந்துள்ள நமது சகோதரர்களுக்குப் போதிய ஸ்தானங்களை ஒதுக்கி வைத்து அவற்றைத் தேர்தல் மூலமாக நிரப்பவேண்டும். தாழ்த்தப்பட்டார் மட்டுமன்றி எங்களது போன்ற பிற்கோக்கடைந்துள்ள சமூகங்களும் பொதுத் தொகுதிகளில் தங்கள் பிரதிநிதிகளைப் பெறுவது இயலாதாயினும், காளாவட்டத்தில் பேதங்க ளொழிய, தாழ்த்தப்பட்டார் மேலோங்க இயலும்.

## V. தொழிற் பிரதிநிதித்துவம்

நாங்கள் எடுத்துக் கூறியுள்ள குடும்பத் தொகுதியில் பெருந்தொகையான தொழிலாளர்களும் சேர்வார்கள். தொழிலாளர் சங்கத்தின் தலைவரோ காரியதரிசியோ பிரதிநிதித்துவம் பெறும் தற்போதைய முறையில் தொழிலாளர் குறைகள் செவ்வனே எடுத்துக் காட்டப்படுவது இயலாது. ஆகவே தொழிலாளர்களுக் குள்ளேயே தொழில் விஷயங்களை நன்குணர்ந்தவர்களே தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

தொழில்களுக்குள் நெசவுத் தொழில் மிக முக்கியமானதா யிருப்பதால், அத்தொழில் செய்யும் செங்குந்தர், சாலியர், தேவாங்கர், சௌராஷ்டிரர் முதலிய சமூகத்தினர் முன்னேறவும் அவர்களது தொழில் தற்காலத்துக் கேற்றபடி விருத்தி யடையவும் தக்க ஏற்பாடுகளைச் சர்க்காரார் செய்யவேண்டும். நெசவுத் தொழிலுக்காகச் சில ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டுமெனக் கூறுவதுடன் வாக்குரிமை விசாரணைச் சபையார் இதனை முக்கியமாகக் கவனிப்பரெனவும் நாங்கள் நம்புகிறோம்.

விவசாயத்தைப் பெருந்தொகையான பேர் கைக்கொண்டிருத்தலால் குடும்பத் தொகுதியே அவர்கட்குப் போதிய நலனளிக்கும்.

## VI ஐக்கிய சட்டசபை

(a) ஒரே வோட்டை மாற்றிக்கொள்ளும் முறையை நாங்கள் ஆதரிக்கவில்லை. மேற்சபை (Upper chamber) க்குப் பிரதிநிதிகள் கீழ்க்கண்டவர்களிடை யிருந்து தேர்ந்தெடுக்கப் பெறல்வேண்டும்.

i. ஜில்லா நகர சபைகள், தாலூக்கா ஜில்லாச் சபைகள் இவற்றின் அங்கத்தினரும் பஞ்சாயத்துத் தலைவர்களும்,

ii. மாகாண சட்டசபை மேற் சபைக்கு 5 அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

iii. வருஷத்துக்கு ரூ. 500-க்குக் குறையாத வருவாய் வரி செலுத்துவோரும், வருஷத்துக்கு ரூ. 750-க்குக் குறையாத கிஸ்தி கட்டும் நிலச்சுவான்களும்,

(b) மாகாண வாக்குரிமை வரையறை முன்னமே [II (c)] குறிக்கப்பட்டுள்ளது.

### ஐக்கிய சட்டசபைக்கு

சென்னை நகர்: ரூ. 5 வரி செலுத்தும் சொத்துடைமை.

கிராமாந்தரங்கள்: ரூ. 10-க்குக் குறையாத கிஸ்தி செலுத்தல்.

ஜில்லா நகரங்கள்: ரூ. 3 வரி செலுத்தல்.

(c) கீழ்ச் சபைக்குத் தற்போதுள்ள முறையே சரியானது.



சமயப் பகுதி

# இந்து தெய்வ மூர்த்த தத்துவார்த்த விளக்கம்

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

(மித்திரன், தொகுதி 5, 181-ம் பக்கத் தொடர்ச்சி)

## பிக்ஷாடந மூர்த்தம்

அறம், பொருள், இன்பம், வீடு எனத் தென்மொழி வல்லுநரான தமிழர்களாலும், தர்மார்த்த காம மோக்ஷமென வடமொழி வல்லுநர்களாலும் புகழ்ந்தோதப்பட்ட புருஷார்த்தங்கள், நான்கனுள் மிகச் சிறந்ததாய் விளங்கும் வீடு பேறாகிய மோட்சத்தை யடையத் தெய்வ விக்கிரஹாராதனையை மிகச் சிறந்த சாதனமாகக் கொண்டாடும் நம்மிந்து தேசத்திலே, சிவாலயங்களில் நடைபெறும் பிரம்மோற்சவங்களில் 9-ம் நாள் (ஒன்பதாந் திருவிழாவில்) மேற்கூறிய பிக்ஷாடந மூர்த்தி எழுந்தருளுங் காட்சி மிக்க வுற்சவம் நனிபெருஞ் சிறப்புடன் மிக்க வைபவமாகச் செய்யப்படுகின்றது. இம்மூர்த்தம், திருவடியிற் பாதுகை யிலங்க, பாத்திரம் (பிரமகபாலம்), சூலம், துடி என்பன திருக்கரங்களில் துலங்க, சடைக்கற்றை விளங்க, நிருவாண கோலத்துடன் காணப்படுகின்றது. இதனை ஆன்றோர்கள் இலயக்கிரப திரோபவ வடிவமென்று கூறுவர். வடமொழி நூலார் திகம்பரர் என்றும், பாமர மாந்தர்கள் அம்மணக் கட்டசாமி (அம்மணங் காட்டுஞ் சுவாமி) என்றுங் கூறுவர். (அம்மணம்=நிருவாணம்.) பிக்ஷாண்டவர் என்று சர்வ சாதாரணமாய் எல்லா ஜனங்களாலும் வழங்கப் பெறுகின்றது. தாருவந முனிவர் தவத்தையும், அவர்களது மனைவிமார்களின் கற்பையுமழிக்கும் பொருட்டு எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், திகம்பரராய்ப் பிரம கபாலம் தாங்கிப் பலியேற்கச் சென்ற கோலமே "பிக்ஷாடந மூர்த்தம்" எனப் பெயர் பெறும். இதனுண்மை யெல்லாந் திருவருண்ஞான மென்னுஞ் சிவஞானம் வாய்க்கப்பெற்ற, கல்வியில் வல்ல உத்தமோத்தமர்களாகிய பெரியோர்களே யறிந்து கூற வல்லுநராவர். ஆயினும் என் சிற்றறிவிற் கெட்டியாங் கியன்ற வரையில் இதனுண்மையை யிவ்விட மெடுத்துக் கூறுதல் மிகையாகாதென்பது எனது துணிபு.

நிஷ்களம், சகள நிஷ்களம், சகளம் என்னு மூவடிவங்களும், சிருட்டி, திதி, சங்காரம் என்னு முக்கிருத்தியங்களும், சுவர்க்க, மத்திய, பாதலமென்னும் மூன்றிடத்துறைதலு மில்லையெனற் பொருட்டாக, இப்பிக்ஷாடந மூர்த்த வுற்சவம் (பெருமான் பலியேற்கும் வைபவம் நிறைந்த காக்ஷி) திருவிழாக்களில் ஒன்பதாவது தினத்தில் செய்யப்படுகின்றது. சில ஸ்தலங்களில் 7-ம் நாளிலும் நடக்கின்றது. அது சாஸ்திரோக்தமாய் அவ்வளவு பொருத்தமானதென்று கூறுதற் கியலாது. இனி இம்மூர்த்தம் நிருவாணியாய், சூலாயுதந் தாங்கி, ஒரு கரத்துத் துடியிலங்க, பிரம கபால மேந்தி, சடைமுடி துலங்க, வேதப்பாதுகை தரித்துப் பலியேற்கும் பாவனையிற் பொலிந்து தோன்றுதலின் உண்மைத் தத்துவார்த்தத்தை யாராய்வோம்.

1. நிருவாணமாய் நிற்குங் காட்சியானது, நமது தேகத்திற் பொருந்தி யழிவில்லாமற் கிடக்கும் காமம், வெகுளி, பொய் என்னும் அழுக்குகளையும், தொண்ணூற்றாறு தத்துவங்களென்னுங் குப்பைகளையும் (தூசு)

"கருமுதற் றொடங்கிய பெருமா ளெல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனுந்
தூய்மையில் குப்பைத் தொலைவின்றிக் கிடந்ததை
யரிதினி கழ்ந்து போக்கி"

என்றபடி யறிவென்னும் நீர் கொண்டு கழுவிச் சுத்தப்படுத்தி, ஆணவம், மாயை, கன்மமென்னும் ஆடை, நீள் கோவணங்களை யொருங்கே யுதறித் தள்ளி, மண், பொன், பெண்ணென்னு மூவாசைக் கலன்களைக் கழற்றி, விரக்தியுடன் வேண்டாமென்று வெறுத்துத் தள்ளி, ஐம்புல நுகர்ச்சியாகிய பிரபஞ்சத் தோற்றப் பொருள்களின் நசையாகிய அவாப் போர்வையைப் புறத்தே வீசியெறிந்து, தூய மனத்துடன் பரிசுத்த முடையவர்களாய், தமக்கென வொன்றுமில்லாமல் (நிருவாணமாய்) சகல பற்றுக்களையுங் கழித்தவராய் நாம் விளங்கவேண்டு மென்பதைக் குறிப்பிடுகின்றது.

2. சூலாயுதந் தாங்கி நிற்றலானது, சூலமானது முத்தலையும் ஒரு தாளு முடையதாகலின், சாத்வீகம், ராசதம், தாமசம் என்னு முக்குணங்களையும், சிருட்டி திதி சங்காரமென்னு முக்கிருத்தியங்களையு முடைய, பிரம்மா, விஷ்ணு, உருத்திரனென்னும் மும்மூர்த்தியாய் நிற்பவர் தாமொருவரே யென்பதையும்; ஆன்மாக்களுக்குப்

பேரின்ப வீடளிக்க விரும்பும் விருப்பமெனப்படும் இச்சா சத்தியையும், அதற்கு வேண்டுவனவற்றை யறியச் செய்யும் அறிவெனப்படும் ஞான சத்தியையும், அறிந்து செய்யுஞ் செயலெனப்படும் கிரியா சத்தியையும் உடையவர் தாமே யென்பதையுங் குறிப்பிடுகின்றது.

3. கபால மேந்தி நிற்றலானது. இறுமாப் புற்ற விமையவர்பாற் சென்று, இரத்தமாகிய குருதியைப் பலியாக வேற்று, அவர்களது அகந்தையை யடக்கிக் காத்ததுபோல் உங்களது தற்போதமாகிய வகந்தையை யொழித்து, ஆணவம், மாயை, கன்மமென்னு மும்மலங்களையும் பசுத்துவத் தன்மையையும், அஞ்ஞானத்தையும் நம்மிடமிருந்து பலியாக வேற்று, நீக்கி யுங்களைப் பரத்துவ (நற்கதி-வீடுபேறு) மடையச் செய்கிறே மென்பதைக் குறிக்கின்றது.

4. துடியேந்தி நிற்றல்: (துடி-தமருகம் அல்லது உடுக்கை) சுத்தாசுத்த அத்துவாக்களைப் பிரவர்த்திக்குங் குணத்தினை யுடையவர் தாமே யென்பதைக் குறிக்கின்றது. "ஓம்" என்னுஞ் சப்தத்தாலிவ்வுலகம் நிலைபெற் றிருக்கிறது என்பது நமது இந்து சாஸ்திர நூல்களின் றுணிபு. அந்த ஓங்காரத் தொனியை யுண்டாக்குங் கருவியாகிய இத்துடியை பெருமான் கையிற் கொண்டு விளங்குவதால் அவர் இவ்வுலகத்தை எப்படி வேண்டுமானாலும் ஆட்டுவிக்கலா மென்பது இதனால் கரதலாமலகம் போல் நன்கு தெளிவாகின்றது.

5. பாதுகை யணிந்து நிற்றல்: முழுமுதற் கடவுளாகிய நஞ்சிவ பெருமானுக்கு வேதங்களே பாதுகையாக வமைந்திருக்கின்றதென்பது நமது இந்துமத நூல்களின் பிரமாணம். அதனால் தான் நமது பெருமானை "வேதமுடி மீது விளங்குபவர்" "வேதப் பொருளா யுள்ளவர்" என்று நமது பெரியார்கள் கூறிப் போந்தனர். "முத்தமிழும் நான்மறையு மானான் கண்டாய்" என்பது நமது நாவுக்கரையர் திருத்தேவாரம். தவிர ஒரு ஆன்மாவினிடத்திலுள்ள "யான்" "எனது" என்னும் அகங்கார மமகாரங்களை யறவே யொழித்து, அவைகளை இரண்டு திருவடிகளிலும், அழகின் மிக்க பாதுகையாக அணிந்து அவைகளை நசிக்கச் செய்து, ஆன்மாக்களை யுய்விக்கச் செய்யும் பெருங் கருணை யுடையவர் என்பதைக் குறிப்பிடும் என்று ஆன்றோர்கள் கூறுகின்றனர். இதனை,

" பரையுயிரில் யானெனதென்
றறநின்ற தடியாம் "

என்ற உண்மை நெறி விளக்கச் செய்யுளான் நன்கு அறியலாம்.

6. சடை முடியுட னிலங்கல்: சடைமுடியாகிய சிகை, ஞானக் குறியை யுணர்த்தலால், ஞான சொரூபியா யிருப்பவர் தாமே யென்பதையும், சகலான்ம கோடிகளுக்கும் ஞான வுணர்வு அளிக்க வல்லவர் தாமே யென்பதையுங் குறிப்பிடுகின்றது.

எனவே முடிவாகக் கூறுமிடத்து, ஆன்மாக்களது சத்தாவரண சத்தியையும்; பசுத் தன்மையாகிய அறியாமையையுங் கெடுத்து, சர்வ சங்கப் பிரத்தியாகஞ் செய்து, ஞானபோதமாகிய நல்லறிவை நன்கு விளக்கி நல்கி, பரமானந்த, நிராகார, பரமசாந்த, நிராமய, சதானந்தமான திருவாணத்தை (மோட்சத்தை-வீடுபேற்றை)க் கொடுப்பார் என்பது இந்த மூர்த்தியினால் நன்கு அனுமிக்கப்படும் உண்மை யென்பது அறிவாளிகளால் நன்கு அறியக் கிடக்கின்றது.

இனி, பெருமான் எக்காலத்தில் யாது காரணம் பற்றி திருவாண கோலமாய்ப் பிக்ஷாபாத்திர மேந்திச் சடைமுடி யிலங்கப் பாதுகை தரித்துப் பிக்ஷாடந மூர்த்தமாய் வந்தாரென்னும் வரலாற்றைப் பற்றி, ஈண்டொரு சிறிது கூறி நம் வியாசத்வைத முடிப்போமாக. ஆதியிலே தாருக வனத்து இருடிகள் சிவசக்தி யில்லாராகி, மாயையிற்பட்டு, மயங்கிப் பரமசிவனிடத்து அன்பு செலுத்துவதில் பிரயோஜனமில்லை யென்றும், யாகங்கள் செய்தலே முத்தியை யளிக்கவல்ல சற்கரும மென்றுஞ் சிந்தித்து, சிவபெருமானை நினைத்தலின்றி அகங்காரங் கொண்டவர்களாய் அவ்வாறே நடத்தி வருகையில் எல்லாவற்றையு மிருந்தபடி யெளிதி லுணரும் பெருமான், அவர்க ளறியாமைக் கிரங்கி, அவர்களுக் கின்னருள் புரிவான் வேண்டி, வைகுந்த வாசியாகிய மகா விஷ்ணுவைத் திருவுளத்திற் கருதினார். விஷ்ணு அக் கணத்தி னனந்த சயனத்தை விட்டு நீங்கி வெள்ளியங் கிரியை யடைந்து, நந்திதேவ ரநுமதி பெற்று இறைவன் சந்நிதானத்தைச் சேர்ந்து மும்முறை வணங்கித் துதித்து நிற்க, சிவபெருமான் விண்டுவுக்குத் தனது எண்ணத்தைக் குறித்துக் காட்டி, சிங்காதனத்தை விட்டு நீங்கியவராய், அவர் கரத்தைப் பற்றிக் கொண்டு, வெள்ளி மலையைக் கடந்து போய்க் கண்ணனைப் பார்த்துப் பஞ்ச சத்திகளி லொன்றாய மோகினி யுருவைக் கொண்டருள்க வென்று கட்டளையிட் டருளினர். அவ்வாறே மாயன் கோடி கோடி சூரியப் பிரகாசமாய்ச் சாமுத்திரிகா இலக்கணத்துக்கு மேற்பட்ட வடிவுடன் மோகினி யுருவெடுத்து, மாயைக் கரசியான பார்வதி கண்டாலும் மயங்கத் தக்க நடையொடி பாவனையுடன் பொலிந்து நிற்க, அம்பிகாபதியும் அவ்வரிவைக் கேற்ற ஆடவ சிரேஷ்டராய், அழகிற் சிறந்த வடிவேற்றுக் கபாலமுஞ் சூலமுங் கையிற் பற்றித் திகம்பரராய்ப் பிக்ஷாடநத் திருக்கோலங் கொண்டு, விளங்கினர். அவ்வடிவின் சீரை மோகினி கண்டு காம விகாரத்தினால் மயங்கிச் சோர்ந்து தம் வயமின்றி நிற்கக் கயிலை இறைவன் அனுக்கிரஹத்தினால் நல்லுணர்வு பெற்று மாலாகிய மயக்கம் நீங்கப் பெற்றதனால் அன்று முதல் விண்டுவுக்கு "மாலென்னுந்" திருநாம முண்டாயிற்று. ஆதலால் பரமன் கொண்ட அப் பிக்ஷாடநத் திருக்கோலத்தின் வனப்பை யார்தான் புகழ்ந் துரைக்கக் கூடும்? பிறகு பரமன் மோகினியாகிய திருமால் தன்னுடன் வர முனிவர்களுக் கிருப்பிட



மாய, தராதலம் புகழுஞ் சிறப்பினையுடைய தாருக வனத் தருகிற் புகுந்து, திருமாலை நோக்கி, நம்மை மதியாமல் தவமே பெரிதென் றெண்ணி நோற்கின்ற முனிவர்கள் வாசஞ் செய்யுஞ் சோலைகடோறுஞ் சென்று மையலுண்டாக்கி, யவர்கள் கொண்ட விரதங்களை யழித்து, நம்மிடத்திற்கு வருகவென் றனுக்கிரஹஞ் செய்தனுப்ப, மகா விஷ்ணுவானவர் அவ்வாறே சென்று மாயை விளைத்து நின்றனர். அச்சமய மருந்தவத் திருந்த, அந்தணர் குழாங்கள் அரிவையைக் கண்டு காம விகாரந் தலைமேற் கொண்டு, மதிமயங்கினவராய், விரத வுறுதிகளை மறந்து, தவநெறி தவறி அவநெறி பூண்டு, பித்தரின் மயங்கி விடாது பின்பற்றித் தொடர்ந்து விளக்கைக் கண்ட விட்டில் போலப் பெரிதுந் துன்புறுவாராயினர். முனிவர்களிவ்விடத்தில் மகா விஷ்ணுவாகிய மோகினியின் செய்கையால் அறிவிழந்து இப்பாடு பட்டிருக்குந் தருணத்தில் இவர்கள் பத்தினிமார்கள் வாசஞ் செய்யுமிடத்தில் பிரமன் செய்த திருவிளையாடலைப் பகருதும். மோகினியாகிய முகுந்தனை முனிவர்பால் விடுத்து நீங்கிய முழுமுதற் கடவுளாகிய பெருமான் சிவந்த சடைகளசைய, சர்வாங்க தூளிதராய்த் திருக் கரங்களிற் சூலமும் பலிபாத்திரமு மேந்தி, வேதப் பாதுகைகளை கால்களிற் றொடுத்து, ரிஷி பத்தினிகள் வாசஞ் செய்யும் பர்ணக சாலைகளில் அவர் மனதுக் கினிய சுந்தர மிகுந்த புருடனாகிப் போய்ப் பண்களுடன் சுருதிகளைப் பாடிக்கொண்டு, ஐய மேற்பாரைப் போல் திரிகின்ற போதினில், இவர் கான ரசத்தைக் காதினிற் பருகிய காரிகைகளாகிய முனி பன்னியர் மனமுருகி, 'யாரம்மா! நம்முடைய வீதிகளில் இப்படி அற்புதமாய்ப் பாடி வருகின்றவரென்று ஒவ்வொருவராய் வெளியில் வந்து கூட்டமாய்க் கூடித் திகம்பரராய் விளங்கும் பெருமானைக் கண்ட வளவில் காமலாகிரி கொண்டு சோர்வடைந்து, அச்சம், மடம், நாணம் என்கின்ற வரம்பு மீறி, காம இச்சையால் லச்சை கொண்டவராகிப் பெருமானை யணைந்து கட்டித் தழுவிச் சுகிக்க வேண்டு மென்னும் பேரவா வலையிற் சிக்கிப் பேதுற்றனர். அம்மங்கையரிற் சிலர், ஐயனை யணையும்படி பிரார்த்தித்தனர். காரிகையிற் பலர் அக்கடவுளை எட்டிப் பிடித்துக் கட்டியணைய முற்பட்டனர். பெண்களிற் பலர் பிச்சை யிட்டுத் தமது இச்சையை வெளிப்படுத்தினர். கன்னியர் பலர் காம நோயாற் கலைய வீழ்ந்தனர். மாதரிற் சிலர் வளை கழன்றனர். நங்கையரிற் சிலர் நாணமழிந்தனர். கொங்கை காட்டி யங்கை யேற்றனர் சிலர். நகை முகங் காட்டி யகமகிழ்ந்தனர் பலர். இவ்வாறாக அத் தாருகவனத்து ரிஷி பன்னியர் நிலை குலைந்து காமமேலீட்டினால் பெருமானைப் பிரியாது பின்றொடர்ந்து வர, அப்பெண்களுடைய எண்ணம் போலவே, இறைவன் அவர்களுக்கு மாந்தப் புணர்ச்சியைக் கொடுக்க, அதனாலவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் இருடியரைப் பெற்றனர். அவ்வாறு தோன்றிய பிள்ளைகள் சிவபெருமான் கட்டளைப்படி தவஞ் செய்திருந்தார்கள். பிறகு இறைவன் இருடியர் வாசம் பண்ணுகிற சாலையில் வரும்போது விஷ்ணுவாகிய மோகினி எதிர்ப்பட்டாள். மோகினியைத் தொடர்ந்து வந்த அம்முனிவர்கள் சங்கரனைப் பின்பற்றி அலங்கோலமாய்க் கற்பழிந்து நின்ற தங்கள் காரிகைகளைக் கண்டு, தாங்கள் மாயவனாகிய மோகினியால் தவநிலை குலைந்து அவநெறி யடைந்ததும், பிச்சாண்டி வேடங் கொண்டு வந்த சங்கரனால் தங்கள் மனைவிமார் கற்பிழந்ததும் தெரிந்து, வெட்க முற்றவர்களாகித் தங்களிருப்பிடஞ் சார்ந்து, இறைவனைக் கொல்லும் பொருட்டு ஓர் அபிசார ஹோமஞ் செய்தார்கள். அவ்வோமத் தீயினின்று மோர் பயங்கரமான புலியானது தோன்றிற்று. அவர்களதனை யுபசரித்துச் சிவபெருமானைக் கொன்றுவிடும்படி ஏவினார்கள். அது இறைவன் மீது பாய வருவது கண்டு, அதனைக் கொன்றுரித்து, அந்தத் தோலை இறைவன் தமது அரையி லுடுத்திக் கொண்டார். அதன் பிறகு ஒரு சூலாயுதத்தை யுண்டாக்கி யேவினார்கள். அது இறைவன்மீது பாயவருவது கண்டு, அதனைக் கொன்றுரித்து அந்தத்தோலை இறைவன் தனது அரையிலுடுத்திக் கொண்டார். அதன் பிறகு ஒரு சூலாயுதத்தை யுண்டாக்கி யேவினார்கள். அதைத் தம் கரத்தில் ஆயுதமாகத் தாங்கியருளினார். பின்னர் அவர்கள் ஒரு மானைச் சிருட்டித் தனுப்ப, அதனைப் பரமன் தனது இடக்கரத்திற் கொண்டருளினார். பிறகு அநேகமான பாம்புகளை யுண்டாக்கி யனுப்பப் பெருமான் அவைகளை யாபரணமாகப் பூண்டருளினர். அதன் பிறகு பூதங்களை யுண்டாக்கி யனுப்ப, அவைகளை வென்று தனது சேனையாக்கிக் கொண்டனர். முடிவில் அவர்கள் நகுலெண்டலை, துடி, முயலகன் முதலியவைகளை யுண்டாக்கி யனுப்ப, அவற்றை முறையே ஏந்தியும், அணிந்தும், பாதத்தில் மிதித்தும், தம் வசமாக்கிக் கொண்டனர். மற்றும் பலவிதமான தீங்குகளை அம்முனிவர்கள் சிவனுக் கிழைக்க அதனால் யாதொரு இடையூறு மில்லாமற் போகவே மனங்கலங்கி இனி என் செய்வோமென் றேங்கி இறைவனை வணங்கி யாம் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென் றிறைஞ்சுதலும், பெருமான் மனமிரங்கி, இன்று முதல் எமது திருவைந்தெழுத்தை யுச்சரித்துத் தவஞ்செய்யக் கடவீர்களென்று கட்டளையிட்டுத் திருக்கயிலைக் கெழுந்தருளினா ரென்ப. எனவே தாருகவன முனிவர் தவத்தையும், அவர்களது மனைவியர் கற்பையும், அழிக்கும்படி பெருமான் திகம்பரராய்ப் பிரம கபாலந் தாங்கிப் பலியேற்கச் சென்ற கோலமே பிக்ஷாடந மூர்த்தமெனப் பெயர் பெறும். இம்மூர்த்தி யிலக்கணத்தைக் காஞ்சிப் புராண முடையார்,

" அடியிற் றொடுத்த பாதுகையு மசைந்த
நடையுமிசை மிடறும்
வடியிற் சிறப்ப நடந்தருளி
மூழையேந்தி மருங்கணைந்த

# ஞானசாகரரது சாட்சியம்

[திரு. பி. சே. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்]

நண்பர் ஞானசாகரரைப்பற்றி நெடுநாட்களாக விசாரித்தும் ஒரு தகவலும் கிடைக்கவில்லை. ஞானசாகரர் எல்லாரும் விரும்பத்தக்க நற்குணமும் நல்லறிவும் படைத்தவர். எனக்கு அவரிடம் என்றும் மதிப்புண்டு. உண்மை, ஒழுக்கம், மனத்தூய்மை, இரக்கம், அஞ்சாமை யாகிய மக்கட்கின்றியமையாத நறுங்குணங்கள் பலவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். தன் உள்ளத் தோற்றத்திற் கண்ட உண்மைகளை எத்தகைய இடர் நேரிடுவதா யிருப்பினும் அஞ்சாது எடுத்துக் கூறும் ஆண்மை யுடையவர். உலகானுபவமும் முன்யோசனையும் நிறையப் பெற்ற ஞானியென அவரைக் கூறுவது மிகையாகாது. இத்தகைய ஒப்பற்ற நண்பரை அடிக்கடி சந்தித்து உரையாட என் உள்ளம் என்றும் விழைந்து நிற்கும். அவ்விழைவினை நானும் அவரைச் சந்திக்கும்போதெல்லாம் பூர்த்தி செய்துகொள்வேன்.

ஆனால், மூன்று மாதங்களாக அவரை நான் சந்திக்கவே இல்லை. அவர் ஊரில் இருப்பதும் இல்லாததும் தெரிந்துகொள்ளவும் முடியவில்லை.

ஒரு நாள் நான் குற்ற விசாரணை மன்றத்தின் (Magistrate court) வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது எதிர்பாராத வண்ணமாய் ஒரு மாமரத்தின் குளிர்ந்த நிழலில் ஞானசாகரர் நின்றுகொண்டிருக்கக் கண்டு மகிழ்ந்தேன். ஆனால், அம்மகிழ்ச்சி வெகு விரைவில் எனதுள்ளத்தினின்றும் ஓடிவிட்டது. அவருக்குப் பக்கத்தில் அவரைக் காவல் புரிந்து நின்ற ஒருவனைப் பார்த்ததும் என் முகம் சிறிது வாடியது. ஓர் செந்தலைச் சேவகன் அவரைக் காவல் செய்துகொண்டிருந்தான். ஏதோ ஓர் பொருளைத் திருடியிருக்கக் கூடுமோ என ஐயுற்றேன். அவர் எக்காலத்தும் எத்தகைய கஷ்டத்தினும் பிறர் பொருளை மனத்தினும் திருட நினையார் என்பது எனக்குத் தெரியும். என் மனம் குழம்பியது.

நான் அங்கு வெகுநேரம் நிற்கவில்லை. ஞானசாகரர் நான் ஜாமீனாக இருக்க விரும்புவாரென எண்ணினேன். விஷயந் தெரியாத முன்னர் அதில் மாட்டிக்கொள்ள என் மனம் இசையவில்லை; அடியோடு புறக்கணித்துப் போய்விடவுந் துணியவில்லை. அவசியமாயின் ஜாமீனிருக்க வேண்டுமென முடிவு செய்துகொண்டு மேல் நடக்கும் விஷயங்களை ஞானசாகரர் அறியா வண்ணம் கவனித்து வர விரும்பினேன்.

சிறிது நேரஞ் சென்றபின் அவரது பெயர் நீதிமன்றத்தில் கூப்பிடப்பட்டது. சேவகன் அவரை அழைத்துச் சென்றான். நானும் அவர்களறியாமற் பின் தொடர்ந்து மன்றத்தின் வெளிப்புறத்தில் சுவரோரமாய் நின்றுகொண்டேன். வழக்கம் போல் நீதிபதி ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அங்குச் சிலர் பேசிக்கொண்ட வார்த்தைகளி லிருந்து ஞானசாகரர் குற்றவாளி யல்லவென்றும், களவாடப்பட்ட ஒரு பசுவின் பொருட்டுச் சாட்சி கூற அழைத்து வரப்பட்டாரென்றும் எனக்குப் புலப்பட்டது. வாதி அனைவரு மறிந்த கிருஷ்ணகோனார் என்பவரே.

ஞானசாகரர் சாட்சிக் கூட்டில் ஏறினார். ஏறி நின்றதும் எக்காரணத்தாலோ அடக்க முடியாதவராய்க் கலகலவெனச் சிரித்தார். அங்கிருந்தார் பலரும் அவர்களை யறியாமற் சிரிக்கத் தொடங்கினர். மன்ற முழுதும் ஒரே சிரிப்பாக இருந்தது. தலைமைக் குமாஸ்தா இது கண்டு கோபித்தவராய் எதற்காகச் சிரிக்கிறீர் என்று அதட்டினார்.

ஞானசாகரர் இரு கரமுங் கூப்பி மிகப் பொறுமையுடன் 'ஐயா, என்னை நீங்கள் இந்த பவுண்டில் அடைக்கும்படி யாருடைய நிலத்தில் புல் மேய்ந்தேன்?' என்றார்.

குமாஸ்தா வயது நிறைந்தவர். அவருக்கு ஞானசாகரர் கூறியது நன்கு விளங்காமையால் தாடியை உருவிக்கொண்டே 'இது தமாஷ் செய்தற்குரிய இடமல்ல, முதலில் பிரமாணஞ் செய்யும்' என்றார்.

ஞான:—அதைச் சொல்லுங்கள்.

குமாஸ்:—நான் சொல்கின்றபடி சொல்லும். 'சர்வ வல்லமையுள்ள கடவுள் முன்பாக........'

(87 - வது பக்கத் தொடர்ச்சி)

தொடியிற் பொலிதோண் முனிமகளிர்
சுரமங்கையரை மயல்மூட்டிப்
படியிட் டெழுதாப் பேரழகாற் பலிதேர்
பகவன் திருவுருவம்''

என்னுஞ் செய்யுளில் நன்கு சித்திரித்து வெகு அழகாக நன்கு விளக்கிக் காட்டி யிருக்கின்றனர். ஆகையால் இம்மையிற் செல்வமும் புகழுங் கல்வியுஞ் சத்துரு ஜயமும் மறுமையில் யோகஞான சித்தியாகிய முத்திப் பேறும் வேண்டுநர், மேற்கூறிய இம் மூர்த்தத்தை அன்புடன் பூஜித்து இன்புறுவார்களாக.

(தொடரும்.)

சுபம்! சுபம்!! சுபம்!!!



ஞான:—(ஆச்சரியத்துடன்) நான் என்ன சொல்லவேண்டும்!

குமாஸ்:—நான் சொல்வது உன் காதில் விழவில்லையா? சர்வ வல்லமையுள்ள கடவுள் முன்பாக.................

ஞான:—சர்வ வல்லமையுள்ள கடவுள் முன்பாகவா? பேஷ், என்ன அநியாயம்!

குமஸ்:—இதற்குள் இங்கே அநியாயம் என்ன வந்துவிட்டது?

ஞான:—சர்வ வல்லமையுள்ள கடவுள் முன்பாக நான் இருப்பதாகச் சொல்ல வேண்டுமோ?

நீதிபதி:—என்ன தப்பு? அதுதான் வழக்கமாகச் செய்யும் பிரமாண ஒழுங்கு.

ஞான:—தங்கட்குத் தெரியாததொன்றுமில்லை. ஒருவன் சாட்சி கூறுங்கால் ஒரு சிறிய பொய்யுஞ் சொல்லக்கூடாதென நூல்கள் முறையிடுகின்றன. பொய்யொன்று மட்டும் கூறாதிருப்பின் ஒருவன் வேறு தர்மமே செய்யவேண்டியதில்லை. சாட்சிகள் உண்மையினையே கூறவேண்டு மென்பது மன்றத்தாரின் விருப்பமுமாகும். அவ்வாறிருக்க ஒரு பெரிய பொய் மூட்டையோடு என் வார்த்தையைத் தொடங்குவது நியாயமாகுமா?

நீதி:—நீ கூறும் சாட்சியத்தில் பொய்ம்மை கலவாதிருக்க வேண்டுவதுதான். பிரமாணங் கூறுவதில் பொய்யான விஷயம் ஒன்று மில்லையே.

ஞான:—(உமக்கு அவ்வளவு புத்தி யிருந்தால் இந்த ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டிருக்க மாட்டீர் என்று தமக்குள் எண்ணிக்கொண்டு உரத்த குரலில்) நீதிபதியவர்களே! என் போன்றார் கடவுளைக் காணமுடியா தென்பது என தபிப்பிராயம். ஒரு கால் இந்த நீதிமன்றத்திற் புகுந்த பின் பார்க்கக் கூடுமோ என்பது எனக்குத் தெரியாது. நான் மன்றத்தில் நுழைந்தது இதுதான் முதல் தடவை. என் முன்பாக இன்னும் இங்குக் கடவுளை நான் காணவில்லை. அது என் கண்களின் தன்மையோ வேறு என்னவோ அறியேன். தாங்கள் ஒரு வேளை தங்கள் நியாயத் தீர்ப்புக்களின் மூலம் பார்க்கக் கூடும். இந்த நீதிமன்றத்தின் எந்த மூலையில் தேடியும் கடவுள் உருவம் என் கண்களுக்குப் புலப்படாதிருக்கிறபோது அவர் முன்பாக என்று நான் எப்படிச் சொல்வது?

அது கேட்டு மன்றத்திலுள்ளா ரனைவரும் நகைத்தார்கள். வாதி வக்கீல் மட்டும் கோபாக்கினியில் மூழ்கினார். அவர் காலம் அவருக்கு மிக அருமையானது. ஒவ்வொரு நிமிடமும் அவருக்குப் பணந்தரத் தக்கதல்லவா? இந்தச் சாட்சியால் அது கெட்டுவிடுகின்றதாதலால் அவர் எழுந்து 'ஞானசாகரரே! உமது பிரம்மக்ஞான உபந்யாசத்தைச் சிறிது நிறுத்திக்கொள்ளும். வேறு சபைகளில் உபந்யசிக்கலாம். தயவு செய்து சட்டப்படி நடந்துகொள்ளும்' என்றார். ஞானசாகரர் அவரைப் பார்த்துக் குறுநகை கொண்டு 'நீங்கள் ஒரு வக்கீலென என்னுகிறேன்' என்றார்.

வக்:—நீங்கள் அதை எப்படி அறிந்தீர்கள்?

ஞான: வெகு சுலபம். அழுக்கு நிறைந்த நாற்கைச் சட்டையை இப்போது தான் பார்த்தேன். ஆகையால், பிரபுவே, எனது பிரம்மக்ஞான உபந்யாசம் தங்களுக்கல்ல. தீர்ப்பு நாளில் தாங்கள் கடவுளை நேராகக் காண்கின்றீர்களென்பது எனக்குத் தெரியும்.

வக்கீலுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அவர் மன்றத்தாரைப் பார்த்து ஆங்கிலத்தில் 'இந்தச் சாட்சியின் அவமானத்தைத் தடுக்கும்படி வேண்டுகிறேன்' என்றிறைந்தார்.

நீதிபதி:—இந்தச் சாட்சி தங்களுடையதே. இஷ்டமாயின் தாங்கள் அவரை வெளியில் அனுப்பிவிடலாம்.

ஞானசாகரரின் சாட்சி யில்லையேல் வழக்குக் கெட்டுவிடு மாதலின் வக்கீல் வாய்மூடி மௌனியானார்.

நீதிபதி விஷய முணர்ந்து குமாஸ்தாவை நோக்கிப் "பிரமாணஞ் செய்வதில் சாட்சிக்கு விருப்பமில்லை. சாதாரணமாக உறுதி கூறச் சொல்லும்" என்றார்.

குமாஸ்:—சரி, அவற்றை யெல்லாம் விட்டுவிடுங்கள். 'நான் சத்தியமாய்ச் சொல்கிறேன்' என்று சொல்லுங்கள்.

ஞான:—நான் பின்னால் கூறவேண்டியவை இன்னவையெனத் தெரியாத முன்னர் சத்தியம் கூறுவது நியாயமல்லவே.

குமாஸ்:—'நீதிபதியைப் பார்த்து' பிரபுவே! இந்தச் சாட்சி ஒரு பெரிய கர்விபோ லிருக்கிறது' என்றார்.

உடனே வாதி வக்கீல் குதித்தெழுந்து 'மிகவும் ஆட்சேபகரமான வார்த்தை' என்று கூச்சலிட்டார்.

ஞானசாகரர் வக்கீலைப் பார்த்து 'ஒரு வெற்றுக் காகிதத்தில் கையெழுத் திடுவதற்கும் சத்தியஞ் செய்யவேண்டிய விஷயம் இன்னதெனத் தெரியாத முன்னர் சத்தியஞ் செய்வதற்கும் என்ன வித்தியாசம்?' என்று கேட்டார்.

நீதிபதி குமாஸ்தாவைப் பார்த்து இந்த உபயோகமற்ற விஷயங்களில் காலம் போக்குவதில் பயனில்லை. சத்தியஞ் செய்ய வேண்டியவைகளைச் சொல்லும்.

குமாஸ்:—ஞானசாகரரே! 'நான் என் சாட்சியத்தில் கூறுவன யாவும் உண்மையே. நான் எதையும் மறைக்கமாட்டேன். பொய்யானவற்றைக் கூறமாட்டேன்' என்று சொல்லுங்கள்.

ஞானசாகரர் மறுக்காமல் அவ்வாறே உறுதி கூறினார். பின்பு வக்கீல் அவரை விசாரணை செய்யத் தொடங்கி அவரைப் பார்த்து, 'மறுபடியும் தமாஷ் பேசவேண்டாம். நான் கேட்பவைகட்கு மட்டும் பதில் கூறும். மற்ற வீண் விஷயங்களை விட்டுவிடுங்கள்' என்று சொன்னார்.

ஞான :—நீர் கேட்பவற்றிற்கு மட்டுந்தான் பதில் கூற வேண்டுமோ? வேறொன்றுங் கூற அனுமதிக்க மாட்டீரோ?

வக் :—முடியாது.

ஞானசாகரர் நீதிபதியைப் பார்த்து, 'நான் உண்மையானவற்றையே கூறவேண்டும். எதையும் மறைப்பதில்லை' என என்னிடம் பிரமாணம் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் வக்கீலோ அவர் கேட்பவற்றிற்கு மட்டும் பதில் கூறச் சொல்கிறார். உண்மையாகக் கூறினால் இது ஒரு நாடகமே. இந்த நாடகத்தில் நான் ஒரு நடிகர். வக்கீல் ஒரு மானேஜர். அவர் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறாரோ அதையே நான் கூறக்கூடாது. அவர் என்னைக் கேட்காத விஷயங்கள் எவ்வளவு உண்மையுடையனவாயினும் அவை என்னிடம் மறைந்தே கிடக்கும். இப்படிப்பட்ட அநியாய மேடையில் நின்று நான் தங்கட்குச் செய்துள்ள பிரமாணத்திற்கு விரோதமாக நடிக்க விரும்பவில்லை' என்றார்.

நீதிபதி :—தங்கட்கு அவசியமெனத் தோன்றும் எதையும் வக்கீல் கேட்காவிட்டாலும் நீங்கள் கூறலாம்.

வக்கீல் :—தங்கள் பெயரென்ன?

ஞான :—திரு. ஞானசாகர சிரௌதி.

வக் :—தங்கள் தகப்பனார் பெயரென்ன?

ஞான :—ஆம், இந்த விஷயம் இவ்வழக்கின் உண்மை முழுவதையும் வெளிப்படுத்து மல்லவா?

வக் :—நான் கேட்பதைச் சொல்லியே யாக வேண்டும். சொல்லுங்கள்.

ஞான :—விமலநாத சிரௌதி.

வக் :—நீர் என்ன மதம்.

ஞான : நான் ஒரு மதமல்ல. என்னிடத்தில் மதங் கிடையாது.

நீதிபதி :—பரதகண்டத்தில் சிவமதம், விஷ்ணு மதம், புத்தமதம், ஜைனமதம் என மதங்கள் உள்ளனவே, நீர் அதில் எதைச் சேர்ந்தவர்.

ஞான :—அதில் எதையும் சேர்ந்தவனல்ல,

நீதி :—அதுபோன்ற வேறு ஏதேனும் மதத்தைச் சேர்ந்தவரா?

ஞான :—ஆம், ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன்.

வக் :—நீர் என்ன வர்ணம்.

ஞான :—கொடிய கறுப்பு.

நீதிபதி :—இந்துக்களுள், பிராமணர், செட்டியார் முதலிய பல பிரிவுகள் உள்ளன. அவற்றில் தாங்கள் எதைச் சேர்ந்தவர்.

ஞான :—அது வக்கீலின் கடமை. என் மார்பில் பூணூல் இருக்கிறதை வக்கீல் பார்க்கிறார். என் பெயர் சிரௌதி எனத் தெரிவித்திருக்கிறேன். இதற்குப் பின்னும் அவர் எனது ஜாதி இன்னதென்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை என நான் எப்படி நினைக்கக்கூடும்.

நீதிபதி பிராமணன் என்று எழுதிக்கொண்டார்

வக் :—உமது வயதென்ன?

ஞான :—(கோர்ட்டிலிருந்த கடிகாரத்தைப் பார்த்து) 51 வருடம் 2 மாதம் 13 நாள் 4 மணி 5 விநாடி.

வக் :—(சிரித்துக்கொண்டே) உமது இருப்பிடம் யாது?

ஞான :—எனக்கு இருப்பிடமில்லை.

வக் :—உமது வீடு எங்கே இருக்கிறது?

ஞான :—வீடா? எனக்கு ஒரு குடிசையும் கிடையாது.

வக் :—நீர் பின் எங்கே வசிக்கிறீர்?

ஞான :—எங்கு வேண்டுமாயினும் இருப்பேன்.

வக் :—ஆனாலும் நீர் தங்குவதற்கு ஒரு இடம் இருக்கவேண்டு மல்லவா?

ஞான :—மதிவாணன் இருந்தபோது எனக்கு இருப்பிட மிருந்தது. இப்பொழுது கிடையாது.

வக் :—ஆனால் இப்போது எங்கே இருக்கிறீர்?

ஞான :—ஏன்! இந்தக் கோர்ட்டிலே தான்,

வக் :—நேற்று எங்கிருந்தீர்?

ஞான :—ஒரு கடையில்.

நீதிபதி:—வீண் வேட்டையினால் பயனில்லை. இருப்பிடங் கிடையாதெனக் குறித்துக்கொண்டேன். அதற்குமேல்?

வக் :—தங்கள் தொழிலென்ன?

ஞான :—ஒரு தொழிலு மில்லை.

வக் :—பின் எப்படிச் சாப்பிடுகிறீர்?

ஞான :—சோற்றில் பருப்பைக் கலந்து ஒவ்வொரு உருண்டையாக வலக்கையி லெடுத்துத் தொண்டைக்குள் செலுத்துகிறேன்.

வக் :—அந்தச் சோறும் பருப்பும் எங்கிருந்து வருகின்றன?

ஞான :—கடவுள் அனுக்கிரகத்தால் பூமியிலிருந்து விளைகின்றன.

வக் :—நீர் ஏதாவது சம்பாதிக்கிறீரா?

ஞான :—ஒரு காசும் கிடையாது.

வக் :—அப்படியானால் திருடுகின்றீரா?

ஞான :—அப்படி ஞானசாகரன் திருடுவனாயின் தங்கள் ஒத்தாசையை முன்னரே நாடி யிருப்பான். தங்களுக்கும் ஒரு பாகம் கிடைத்திருக்கும். ஒரே நாளில் இந்த அழுக்குச் சட்டையை அணிய வேண்டிய அவசியமும் தங்களை விட்டொழிந்திருக்கும்.

வக்கீல் பிறகு ஒரு சிறிதும் பயனில்லை எனக் கண்டு மன்றத்தாரவர்களைப் பார்த்து 'இந்தச் சாட்சியை நான் விரும்பவில்லை. என்னால் விசாரணை செய்ய முடியாது' என்றார்.

(தொடரும்.)



## பாமாலைப் பகுதி

## "வினா—விடை"

[திரு. வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

158907

### முகில்

கருநிற முகிலே! மேலாங் கரியநின் வண்ணமெங்கே
மருவிடப் பெற்றா யென்ன வளந்திகழ் பரத நாட்டின்
திருவனை மாதரார்தஞ் செழுமலர் வேய்ந்து வாசம்
பெருகிடு கூந்த லின்றும் பெற்றன னென்ற தன்றே.

### இளமதி

சீதநன் மதியே! மூன்றும் பிறையெனச் செகத்தி னோர்கள்
ஓதுநின் வடிவ மெங்கே பெற்றனை யென்ன வொண்டார்
மாதர்க ளடியைப் போற்றி வாசநற் றிலதந் தீட்டும்
ஏதமில் நுதலி னின்றும் பெற்றன னென்ற தன்றே.

### வில்

கூரிய கணையின் வீரர் குறித்திடப் பொருதும் வில்லே!
யாரிடைப் பெற்றா யாக்கை வளைந்தநின் றோற்ற மென்ன
வாரிஷைப் படுமென் கொங்கை மாதரார் புருவங் கண்டச்
சீரிய வடிவைப் பெற்றே னென்றுரை செப்பிற் றன்றே.

### கயல்கள்

குளிர்நறும் புனலில் வாசங் கொண்டிடுங் கயல்காள்! நீங்கள்
ஒளிகொளும் மேனித் தோற்ற முற்றவா றுரைத்தி ரென்ன
அளிவளர் கூந்தன் மின்னா ரம்பெனுங் கண்க ளின்றவ்
வெளிய நல்வடிவைப் பெற்றோ மென்றுரை விரித்த வன்றே.

### வெண்முத்து

சங்குவேய் திங்க ளிப்பி தாமரை கமுகு வாழை
துங்கநற் சாலி மேகங் கடலிடைத் தோன்று முத்தே!
பொங்குநின் னொளிதா னெங்கே பெற்றனை புகல்தி யென்ன
மங்கையர் பற்க ளின்றும் வாங்கினே னென்ற தன்றே.

### கோவ்வைக்கனி

கொவ்வையங் கனியே நின்பாற் குலவு செவ்வண்ணந் தானீ
யெவ்விதம் பெற்றா யென்ன விளமயி லனைமென் சாயல்
நவ்வியங் கண்ணினார்தம் நகைதவழ் பவளத் தூவாய்
செவ்விதழ் நின்றம் மேனி பெற்றதாய்ச் செப்பிற் றன்றே.

### இலவம் பஞ்சு

மண்ணிடை மென்மை தன்னில் மாட்சிகொ ளிலவம் பஞ்சே!
எண்ணு நின்மிருது தன்மை யெவரிடம் பெற்றா யென்ன
பண்ணொலி பயின்று வொன்பான் பருமணிச் சிலம் பாற்றும்
பெண்களி னடியினின்றும் பெற்றன னென்ற தன்றே.




விநோதன் : ஆ! ஒரே ஒரு மயிரிழை தப்பிற்று; இல்லாவிட்டால்..........

ஆனந்தன் : இல்லாவிட்டால் என்ன வாயிருக்கும்?

விநோ : இல்லாவிட்டாலா? இன்னேரம் ஒரு புதிய, நீண்ட, அழகிய, விலையுயர்ந்த மோட்டார் காரில் நான் 'ஜில்'லென்று சாய்ந்துகொண்டு சவாரி செய்வேன்.

ஆன : எப்படித் தப்பிற்று?

விநோ. வீட்டை விட்டு வெளியே வந்தேன். வாயிலில் அந்தக் கார் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது. அதி லுட்கார்ந்துகொண் டிருந்த சொந்தக்காரர் எனக்கு நெருங்கிய சிநேகிதர். குறைந்தது பத்துத் தடவையாவது அவரைப் பார்த்து வந்தனம் செய்திருப்பேன். நேரே அவரிடம் போனேன். அழகாகச் சிரித்துக்கொண்டே, "என்ன சார் இந்தக் காரை நமக்குக் கொடுத்துவிடுங்களேன்" என்றேன்..........

ஆன : அப்புறம்?

விநோ : அவர் மட்டும் "இந்தாரும்" என்று ஒரு வார்த்தை சொல்லி யிருந்தால் கார் யாருடையதா யிருக்கும்?

* * *

பிச்சைக்காரன்தான். இருந்தாலும் பார்வைக்கு மந்திரவாதிபோ லிருந்தான். பார்த்தால் சிறிது அச்சமாகவே இருந்தது. "அம்மா பசிக்கிறது. ஏதாவது கொடுங்கள்" என்றான். "ஒன்றுமில்லை" என்றேன். "கொடுத்தால் சரி, இல்லையோ, அடுத்த ஊரில் செய்தது போல் செய்துவிடுவேன்" என்று மிக மிடுக்குடன் கூறினான். 'என் வம்பு' என்று சிறிது அன்ன மளித்துவிட்டுச் சாவகாசமாக "என்னவப்பா செய்தாய் அடுத்தவூரில்?" என்றேன். "ஆ! அதையா கேட்கிறீர். பிச்சை கேட்டேன். ஒருவரும் கொடுக்கவில்லை. பேசாமல் பட்டினி போட்டுவிட்டேன்" என்றான்.

* * *

உபாத்தியாயர் : சோமா, உனக்குத் தேவாரத்தில் எத்தனைப் பாட்டுக்கள் தெரியும்?

சோ : தேவாரம் முழுதுமே தெரியும்.

உபா: ஏதோ, ஒரு பாடல் சொல் பார்ப்போம்.

சோ : தனித்தனிப் பாடலாகத் தெரியாது. முழு புத்தகத்தையும் பார்த்திருக்கிறேன்.

* * *

சேனபதி : உனக்குப் போர்ப் பழக்க முண்டா?

சிப்பாய் : ஓ, உண்டு.

சேன : உன் தேகத்தில் கத்திக் குத்து அடையாளம் ஏதாவது இருக்கிறதா?

சிப் : இதோ, தோள் பட்டையில்.

சேன : அது எந்தச் சண்டையில் பட்டது?

சிப் : சென்ற மாதம் என் மனைவிக்கும் எனக்கும் நடந்த சண்டையில்.

* * *

கணவன் : என்ன சொன்னாலும் தெரிகிறதில்லை. பழைய சனியன்களையே பிடித்துக்கொண்டு அழுகிறாயே. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பதை நீ கேட்டதே யில்லையா?

மனைவி : சரி, இதோ இப்போதே நீங்கள் சொல்கிறபடி நடக்கிறேன். இதோ கழற்றிவிட்டேன் பழைய நகைகளை யெல்லாம், இதோ எறிந்துவிட்டேன் பழைய துணிகளை யெல்லாம். வாரும் இப்பொழுதே கடைக்கு, புதியவைகள் வாங்கி வரலாம்.

* * *

கோவிந்தன் : கோபாலா, நேற்று நீ எனக்கு ஐந்து ரூபாய் கொடுத்தது போல் கனவு கண்டேன்.

கோபாலன் : அப்படியா? அப்பொழுது நீ எனக்கு 5 ரூபாய் பாக்கி.

(மறுநாள்) கோவி : கோபாலா, நேற்றிரவு...

கோபா : என்ன?

கோவி : நான் உனக்கு 50 ரூபாய் கொடுத்தது போல் கனவு கண்டேன்.

* * *

தந்தை : ஓஹோ! இதற்குள் இவ்வளவு தேறிவிட்டாயா? மூளைக்கும் பொழுதே பீடி யென்னடா வாயில்?

மகன் : தங்கள் பெயரை முன்னுக்குக் கொண்டு வரத்தான் பாடுபடுகிறேன்.

---



# ஜீவ வதையும் தெய்வ வழிபாடாமா?

"வெகு வெகு காலத்திற்கு முன்னே தான் மனிதர்கள் அநாகரிக முடையவர்களாய், மிருகத் தன்மை மிகுந்தவர்களாய், கொடூரம் நிறைந்தவர்களாய்க் கிடந்தார்கள்; இப்பொழுதோ நாம் நாகரிகமும், அன்பும், கருணையும் ஒருங்கே திரண்ட உருவாய் விளங்குகின்றோம்" என எண்ணி மனப்பால் குடித்து மயங்கிக் கிடக்கும் நாம் சிறிது கண் விழித்து, நம்மைச் சுற்றி நடக்கும் கொடுமைகளையும் அக்கிரமங்களையும் பார்ப்போமாயின் திடுக்கிட்டு வாய்திறந் தரற்றுவோம் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தெய்வங்களின் பெயரால்—மக்கட்கு நன்மை யருளுமாறு தெய்வ வழிபாடாற்று முறையால்—எண்ணிறந்த வாயில்லாப் பிராணிகள் வதைக்கப்படுவதைக் காணும் நாம், "இது என்ன இருபதாம் நூற்றாண்டுதானா? அல்லது இராக்ஷஸ யுகமா?" என்று ஐயுறவேண்டி யிருக்கிறது. ஜீவ ஹிம்ஸையைத் தடுக்கும் மேனோக்கத்துடன் நிருமாணிக்கப்பட்டு வேலை செய்துவரும் ஜீவகாருண்ய சங்கத்தின் (S. P. C. A) தலைவர் நீதிபதி திரு. G. H. B. ஜாக்ஸன் அவர்கள் இந்த அக்கிரமத்தைத் தடுக்குமாறு பொது ஜனங்கள்பால் செய்யும் முறையீடு இவ்விஷயத்தில் நமது கண்களைத் திறந்திடும்.

அது வருமாறு:—

"பிராணிகட்கு இழைக்கும் பலவித இன்னல்களையும் தடுக்கும் வண்ணம் ஜீவகாருண்ய சங்கத்தார் எடுத்துவரும் உழைப்பினைப் பொது மக்கள் நன்கறிவர். ஒவ்வொரு வருடமும் சுமார் 2,000 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. அநேகமாக, பாதையால் வருந்தும்பொழுது வண்டியிற் பூட்டி யோட்டப்படும் எருதுகளும், குதிரைகளும், புண்ணையும் இரணங்களையும் பொருட்படுத்தாது செக்குக்களில் பூட்டப்பட்டு இரவும் பகலும் உழைக்கும் எருதுகளும், ஒன்றாகப் பிணைக்கப்பட்டுத் தலை கீழாகத் தூக்கிச் செல்லப்படும் கோழிகளுமே அடிக்கடி இவ்வாறு கண்டு பிடிக்கப்படுகின்றன.

"ஆனால் எங்கள் ஆட்களது பார்வையிலும் போலீசார் பார்வையிலும் படாது மதக்கொள்கைகள் சம்பந்தமாகப் பல ஜீவவதைகள் நடக்கின்றனவென நான் கேள்விப்படுகிறேன். பொது ஜனங்களது மனமார்ந்த உதவியும் ஒத்துழைப்புமின்றி இத்தகைய ஹிம்ஸைகளை நிறுத்துவது ஜீவகாருண்ய சங்கத்துக்கு மிகப் பெருங் கஷ்டமாகும். கல்விப் பயிற்சி யுடையவர்கள் சிலரும் பழங் கொள்கைகளையும் வழக்கங்களையும் தடுக்கலாகா தென்னும் கொள்கையுடன் இத்தகைய பலிகளை ஆதரிக்கின்றனர் போலும். பலி கொடுக்கப்படும் ஆடுகளும், பன்றிகளும், எருமைகளும், கோழிகளும் அடையும் சித்திரவதைகளும், கஷ்டங்களும் அநேகருக்குத் தெரியா. ஆடுகளின் கால்களும் காதுகளும் சிறிது சிறிதாக அறுத்தெடுக்கப்படுகின்றன. தலைகள் உடைக்கப்படுகின்றன. இவ்வாறு அவைகள் இறக்குமுன் அவற்றின் அம்சங்கள் சேதிக்கப்படுகின்றன. சில சமயங்களில் ஆட்டுப் பலிகளில் ஆடு 32 துண்டுகளாக வெட்டப்பட்டு அதன் மாமிசம் சிறிது சிறிதாக எடுக்கப்படுகிறது. பொது மக்கள் பார்வையினின்றும் தப்புதற்கோ என்னவோ இந்த வதை நள்ளிரவில் செய்யப்படுகிறது. சூல் கொண்டுள்ள ஆடுகளும் பலியிடப்படுகின்றன. தாயின் கருப்பையினுள்ளிருந்து குட்டிகள் வெளியே இழுக்கப்பட்டு முதலில் கொல்லப்படுகின்றன. பின்னர் தாய் கொல்லப்படுகிறது. உயரத்திலிருந்து, பூமியில் நாட்டி வைத்திருக்கும் கூரான ஈட்டிகள் மீது பன்றிகள் எறியப்படுகின்றன. வேண்டிய உயரம் வரும்வரை அவை அங்கேயே கிடக்கின்றன. அவை இறக்குமுன் இவ்வாறு சித்திரவதை செய்யப்படுகின்றன. இறந்த பிறகு அவை நீக்கப்பட்டு வேறு பன்றிகள் எறியப்படுகின்றன. அதற்கென்று தயாரித்த குழியில் எருமைகள் விடப்பட்டுப் பல பக்கங்களிலிருந்து கூரிய வாட்களால் குத்தப்படுகின்றன. இவ்வாறு பேரவஸ்தை பட்ட பிறகு அதன் தலை அறுக்கப்படுகிறது.

"கோழிகளைப் பலி யிடுவதில் அவை மேலும் கீழுமாகத் தூக்கிப் போட்டு வதைத்துக் கொல்லப்படுகின்றன. சில சமயங்களில் இந்தத் 'தெய்விகப் பணி'க்கென நியமிக்கப்படும் ஆட்கள் அவற்றைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள்."

இந்த அக்கிரமங்களை யெல்லாம் கேட்பவர் எவராவது—மானிடத் தன்மை பொருந்தியவராயின்—உருகாம லிருக்க முடியுமா? அன்பர்களே! இதுவோ நாகரிகம்? இதுவோ ஜீவகாருண்யம்? இதுவோ மதம்? இதுவோ தெய்வ வழிபாடு? கடவுள் அன்புருவல்லரா? அவர் தமது குழந்தைகள் இங்ஙனம் வதைக்கப்படுவது கண்டு வாளா விருப்பரா? உலகத்திலே உயிர் வாழ்தற்கு மனிதனுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை சிறு புழுவுக்கும் உண்டென்பதை நாம் உணர வேண்டாவா? உணர்ந்தோமாயின் இத்தகைய ஹிம்ஸைகளை, அவற்றிற்குக் காரணமாயுள்ள மூடப் பழக்கங்களை, வேரறுக்க உடனே முற்பட வேண்டாவா?

# திருப்பரங்குன்றம்

['இந்து'விற் கண்டது]

திருப்பரங்குன்றம் என்பது மதுரைக்குத் தென்மேற்கே 5 மைல் தூரத்திலுள்ள ஒரு ரெயில்வே ஸ்டேஷன். ஸ்டேஷனுக்கு அருகே ஸ்ரீ சுப்ரமணிய ஸ்வாமி எழுந்தருளியுள்ள மலையின் பெயரால் தென்னிந்திய ரெயில்வே ஸ்டேஷனும் வழங்கி வருகிறது. இம்மலையானது செங்குத்தாய்க் கடல் மட்டத்திலிருந்து 1048 அடி உயர்ந்திருக்கிறது. இதனடியில் மிகப் புராதனமான ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி கோயிலும் ஊரும் இருக்கின்றன. இக்குன்றமானது இந்துக்களால் மாத்திரமே யன்றி மகம்மதியர்களாலும் புண்ணிய க்ஷேத்திரமாகக் கொண்டாடப்பெற்று வருகிறது. சென்னை, செங்கற்பட்டு முதலிய இடங்களிலுள்ளவர்களுக்குத் திருக்கழுக்குன்றம் இருப்பதுபோல மதுரை வாசிகளுக்கு இத்தலமானது தேகாரோக்கியத்தின் பொருட்டுச் செல்லும் இடமாக இருக்கிறது.

பூர்வ காலத்தில், வாயு பகவானுக்கும் ஆதிசேஷனுக்கும் தம்மிருவருள் மிகுந்த பலசாலி யார் என்ற விவாதம் கைலாசத்தில் உண்டாயிற்று. ஆதிசேஷன் தனது பெரிய படத்தினால் கைலாச மலையை மூடிக்கொண்டான். அதனால் தேவர்கள் மூச்சுவிட முடியாமல் வருந்தினார்கள். வாயு பகவானோ ஆதிசேஷனை அப்புறப்படுத்த வேண்டித் தன்னுடைய மகத்தான பலத்தைக் கொண்டு அடித்துக்கொண்டிருந்தான். தேவர்கள் மிகுந்த கஷ்டத்தை யடைந்தார்கள். அதனால் ஆதிசேஷன் கொஞ்சம் பின் வாங்க நேர்ந்தது. இந்தச் சந்தர்ப்பம் நோக்கி வாயு உள்ளே நுழைந்தான். நுழைந்த வேகத்தில் கைலாச மலையின் ஒரு சிகரமானது உடைந்து பாண்டிய நாட்டிற் கொண்டுவந்து தள்ளப்பட்டது. அதுவே திருப்பரங்குன்றம் என்று ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் திருவிளையாடலைப் பற்றிச் சொல்லும் ஸ்காந்த புராணமானது கூறுகிறது. இம்மலை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து பார்த்தால் சிவலிங்க வடிவமாகத் தோன்றுகிறது. அதனை அவ்வாறே பாவித்து ஜனங்கள் வணங்கி வருகிறார்கள். கிரிப் பிரதக்ஷணம் செய்வோரும், அங்கப் பிரதக்ஷணம் செய்வோரும், காவடி எடுப்போரும் இம்மலையை வலமாகச் சுற்றி வருகிறார்கள். கோயில் உற்சவாதிகளும், திருக்கல்யாணத் தேரும், அதே முறையில் குன்றைச் சுற்றி வருகின்றன.

பழநியைப் போல இம்மலையையும் மகம்மதியர்கள் புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதுகிறார்கள். மகம்மதியர்களுக்கும் இந்துக்களுக்கும் இங்குத் தனித்தனிக் கோயில்கள் இருக்கின்றன. ஸ்கந்தர் என்பது ஸ்ரீ சுப்பிரமணியருடைய பெயராகையால் இந்துக்கள் அதை ஸ்கந்தமலை என்றும், மலையின் உச்சியில் சமாதி வைக்கப் பெற்றுள்ள மஹானாகிய சுல்தான் சிகண்டர் சல்கார் மைன் பாஷா என்னும் பக்கிரிக்காக ஒரு கோரி கட்டப்பட்டிருப்பதனால் முஸ்லிம்கள் அதைச் சிகண்டர் மலை என்றும் சொல்லுகிறார்கள். மலையின் அடியிலிருந்து (உச்சியிலுள்ள) கோரி வரையில் படிக்கட்டுகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இப் படிக்கட்டுகள் மேலே போகப் போக ஒழுங்கா யிராவிட்டாலும், கால் வைத்து ஏறக்கூடிய படி சௌகர்யமுடையனவா யிருக்கின்றன. கோரி இரண்டு பெரும் பாறைகளின் பிளவு போன்ற மத்திய இடத்தில் இருக்கிறது. அங்குத் தான் அம்மஹான் இருந்து அடக்கமானதாகச் சொல்லப்படுகிறது. அதன் எதிரில் ஒரு மண்டபம் இருக்கிறது. அதன் தூண்கள் இந்து கட்டடங்களிலுள்ளவைபோலவும், மேலே செங்கற்களாற் கட்டப்பட்டுள்ள சிகரம், கலசம் முதலியவை முஸ்லிம் கட்டடங்களிலுள்ளவைபோலவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திருப்பரங்குன்றம், ஸ்ரீ சுப்பிரமணியர் எழுந்தருளியுள்ள மிகப் பிரதான ஸ்தலங்களாகிய ஆறு படை வீடுகளுள் ஒன்றாகக் கருதப்படுவதோடு, மத சம்பந்தமாகவும், பாரம்பரிய சம்பந்தமாகவும், ஒரு சிறந்த ஸ்தலமாகக் கொண்டாடப்பெற்று வருகிறது. இத்தலம், பிரமன், சரஸ்வதி, சிவபெருமான், துர்க்கை, அரிச்சந்திர மகாராஜர், பாராசர் குமாரர்கள் ஆகியோர்க்கும் உரிய இடமாக இருக்கிறது. ஸ்ரீ சுபபரமணியருக்கும், இந்திரன் புதல்வியாகிய தெய்வயானைக்கும் திருமணம் நடந்த க்ஷேத்திரமாகவும் கொண்டாடப்பெற்று வருகிறது. சூரபத்மன் முதலிய பராக்கிரமம் வாய்ந்த அசுரர்கள் தேவர்களை ஹிம்சித்து வந்தார்கள். தேவர்கள் மிகுந்த ஆபத்தான நிலையில் இருந்தபடியால் தங்களுக்குள் அவ்வசுரர்களை அழிக்க வல்லவர் எவராயினும் அவருக்குத் தன் குமாரத்தியைத் திருமணஞ் செய்து கொடுப்பதாக இந்திரன் வாக்களித்தான். ஸ்ரீ சுப்பிரமணியர் முன் வந்து அசுரர்களோடு போர் புரிந்து வெற்றி பெற்று அவர்களை அடியோடு நாசமாக்கினார்.

இங்குப் பிணிகளைப் போக்கக்கூடிய 12 புனித தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றுள் சரவணப் பொய்கை, சத்தியம்வாகூவம், பிரமகூவம், உமையாண்டவர் தீர்த்தம் ஆகியவை பிரசித்தமானவை. கோயிலுக்குள் இருக்கும் சந்யாசிக் கிணற்றின் தீர்த்தம் நீர் வியாதி முதலிய பிணிகளைத் தீர்ப்பதிற் பேர்போனது.

ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி எழுந்தருளியுள்ள இப் படைவீடானது, நக்கீரர் விடுதலை பெற்ற காரணத்தாலும் சிறப்புற்று விளங்குகிறது. ஆயிரம் ஆட்களைக் கொன்று ஒரு பெரிய யாகத்தை நிறைவேற்ற எண்ணியிருந்த ஒரு பூதமானது 999 ஆட்களைப் பிடித்து ஒரு குகையில் அடைத்து வைத்துக்கொண்டு இன்னும் ஒருவரை எதிர்பார்த்திருந்தது. கடைசியாக நக்கீரர் அகப்பட்டார். 999 பெயரும் தங்கள் மரணத்திற்கு நக்கீரரே காரணபூதர் என்று சொல்லி அவரைப் பழித்தார்கள். ஆகவே நக்கீரர் ஸ்ரீ சுப்பிரமணியருடைய உதவியை நாடி ஒப்புயர்வற்றதாகிய 'திருமுருகாற்றுப் படை' என்னும் நூலைப் பாடி யருளினார். அப்பெருமான் பிரசன்னமாகிப் பூதத்தைக் கொன்று ஆயிரவரையும் விடுதலை செய்தருளினார். இன்றும்கூட ஆபத்துச் சமயத்தில் இந்நூலைப் பாராயணம் செய்வோர்க்கு அதே விதமான பலனுண்டாகிறது என்று நம்பப்பட்டு வருகிறது. அந்நம்பிக்கைக்கும் போதிய ஆதார மில்லாமற் போகவில்லை. நக்கீரர் வேண்டுகோளின்படி ஸ்ரீ சுப்பிரமணியர் மலையின் உச்சியில் காசிக் கங்கையோடு விஸ்வநாதரையும், யமுனை யாற்றையும், தேளி மீனோடு சரஸ்வதி யாற்றையும், கொண்டுவந்து அமைத்ததாகச் சொல்லப்படுகிறது. இக்கோயிலில் பஞ்ச லிங்கத்திற் கெதிரில் சிலையில் செதுக்கப்பட்டுப் பயபக்தியோடு நின்றுகொண்டிருக்கும் உருவத்தை நக்கீரர் என்று சொல்லுகிறார்கள். சைவ சமயாசாரியர்களாகிய திருஞான சம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளாலும், சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளாலும் பாடப் பெற்றதாலும், சேர சோழ பாண்டியராகிய மூவேந்தருடனிருந்து சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளால் வணங்கப் பெற்றதனாலும், இத்திருப்பதிக்கு மற்றுமோர் சிறப்புண்டு.

ஸ்ரீ சுப்பிரமணியருக்குரிய பெரிய ஆலயமானது மலையின் வடவண்டை அடிவாரத்தை ஒட்டி இருக்கிறது. இதன் உட்பாகமாகிய அர்த்த மண்டபம் பெரிய பாறையைத் துளைத்து அமைக்கப் பெற்றிருக்கிறது. பரிசுத்தமான இந்த இடத்தில் விஷ்ணு, சுப்பிரமணியர், துர்க்கை, விநாயகர், ஈஸ்வரன் ஆகிய ஐவரும் எழுந்தருளி யிருக்கிறார்கள். அர்த்த மண்டபத்திற்கு முன்னால் வரவர ஒன்றுக்கொன்று தாழ்ந்த தரை மட்டத்தில் பல மண்டபங்கள் கட்டப் பெற்றிருக்கின்றன. இவை எல்லாவற்றிலும் தாழ்ந்துள்ள வெளி மண்டபம் வெகு நேர்த்தியானது. பெரிய பெரிய கற்பாறைகளால் செய்யப்பட்டுள்ள இதன் மேற்பரப்பை, ஒரே கல்லினால் செய்யப்பட்டு இருபது இருபத்து நான்கு அடி உயரமுள்ள 48 கம்பங்கள் தாங்கிக் கொண்டிருக்கின்றன.


இப்பெரிய கோயிலே யன்றி, இதே மலையில் பழநியாண்டவர், உமையாண்டவர், மேற்கூறிய காசி விஸ்வநாதர் கோயில்களும் இருக்கின்றன. மலையின் தென்புறத்தில் ஏறி ஏறக்குறைய மத்திய பாகத்தில் சென்றால் அங்கு ஒரு பெரிய கற்பாறையானது கீழே யாதொரு ஆதாரமுமின்றித் தொங்கிக்கொண் டிருப்பதுபோ லிருக்கிறது. அதன் கீழே நீர் நிறைந்த ஆழமான ஒரு ஜுனை இருக்கிறது. அங்கு $2\frac{1}{2}$ அடி நீளமும் 2 அடி அகலமுமுள்ள இரண்டு நிர்வாண ஜெயினச் சிலைகள் வழக்கப்படிக் கைகளைத் தொங்கவிட்டுக்கொண்டு ஒன்றன் பக்கலின் ஒன்றாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

அதே பாறையின் தென்புறமாகக் கொஞ்சதூரம் சென்றால் காசி விஸ்வநாதர் கோயிலிருக்கிறது. இங்கு ஷை ஜுனையானது அகன்று மிகவும் ஆழமாய் ஒரு பெரிய தடாகத்தைப்போன்றிருக்கிறது. அங்கு அப்பாறையில் காசி விஸ்வநாதர், விசாலாக்ஷி, கணேசர், சுப்பிரமனியர், பைரவர் முதலிய உருவங்கள் செதுக்கப்பெற்றிருக்கின்றன. ஜுனையில் சிறுதேளி மீன்கள் வசிக்கின்றன. நீரில் கையை வைத்து அசைத்துக் 'காசி விஸ்வநாதா! காசி விஸவநாதா!' என்று சொல்லிக் கூப்பிடுவோமானால் அம்மீன்கள் தோன்றுகின்றன.

மலையின் தென்னண்டை அடிவாரத்தில் பாறையில் குடைந்தெடுத்த உமையாண்டவர் கோயில் இருக்கிறது. பாறையில் குடைந்து அமைக்கப்பட்டுள்ள அருமையான கோயில்களுள் இதுவும் ஒன்று என்பதில் ஐயமே இல்லை. இதன் மேற்புறத்தில் 8 சதுர அடியுள்ள ஒரு சிறு கோயில் உண்டு. அதன் உட்சுவரின் மத்தியில் ஒரு புறம் காளியும், மற்றொரு புறம் மிருதங்கம் வாசிப்போனும் நிற்க ஒரு காலத்தில் மிக உக்ரமான நடராஜ மூர்த்தி இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. அது பெரும்பாலும் சிதைவுற்றுத் தற்போது அதன் மேல்பாகம் மாத்திரமே இருந்துகொண்டிருக்கிறது. இவற்றின் கீழண்டை வள்ளி தேவசேனா சமேதராய் ஒரு சுப்பிரமணியர் உருவமும் சிவபெருமானுடைய அர்த்தநாரீஸ்வர (பாதி ஆண் பாதி பெண்) வடிவமும் இருக்கின்றன. பாறையில் குடைந்துள்ள இக்குகையின் கீழ்ப்பாகம் முழுதும் முதலாவது மாறவர்மன் சுந்தர பாண்டியனைக் குறித்த கல்வெட்டுகள் நிறைந்திருக்கின்றன. அதில் இப்பாண்டியன் அரசாட்சியின் ஆறாவது ஆண்டில் இக்கோயிலுக்கு விடப்பட்ட மானியங்களைப் பற்றிக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலுக்கு வெளிப் புறத்தில் அதே பாறையில் அநேக ரிஷிகளின் உருவங்களும், தேவதைகளின் உருவங்களும் காணப்படுகின்றன. இக்குகைக் கோயில் அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

திருப்பரங்குன்றங் கிராமமானது ஆதியில் இத் தேவஸ்தானத்தின் நித்திய பூஜைச் செலவுக்காகப் பராக்கிரம பாண்டியனால் மானியமாக விடப்பட்டிருந்தது. அரசாங்கத்தார் அக்கிராமத்தை எடுத்துக்கொண்டு அக்காலத்திய வருஷ வருமானத்தைக் கணக்கிட்டுத் தற்போது கோயிலுக்கு மோகினி கொடுத்து வருகிறார்கள். சென்னை அரசாங்கத்தாருக்கும், தேவஸ்தானத்திற்கும் நெடுங் காலமாக இம்மலையைக் குறித்து நடந்துவந்த வியாஜ்ஜிய சம்பந்தமாகச் சமீபத்தில் பிரிவி கவுன்சிலில் தீர்ப்பு கூறப்பட்டது. அதன் பிரகாரம் மலை இப்போது தேவஸ்தானத்திற்குத் திரும்பக் கிடைத்தது.

இம்மலை இன்னும் முற்றும் சோதிக்கப்படவில்லை. அவ்வாறு செய்யப்படுமாயின், சரித்திரம், பூர்வீகம், சிற்பம் முதலியவை சம்பந்தமான அளவிறந்த குறிப்புகள் கிடைக்குமெனத் தோன்றுகிறது. பண்டைய இலக்கியங்கள் இத்தலத்தைப்பற்றி ஏராளமாய்க் கூறுகின்றன. சங்க நூல்களாகிய




## வாண ரயில் வண்டி

சாதாரண ரயில் வண்டிகள் ஆகாய விமானங்கள் பறந்து செல்லக் கூடிய வேகத்தில் ஓட முடியா திருப்பதால் தபால்போக்கு வரத்துகள் தாமதித்து விடுகின்றன வெனக் கருதி ஜெர்மன் நிபுணரான ஸ்ரீ. பிரான்சிஸ் குரூச்சன்பர்க் சமீபத்தில் ஒரு வித வாண ரயில் வண்டி யொன்றைக் கண்டுபிடித்தார். அது நீளமான சுருட்டுப் போன்ற வடிவமுடையது. ஜெர்மனியில் பேர்பெற்று விளங்கும் ரசாயன நிபுணரான ஸ்ரீபிரிட்ஜ் ஒப்பல், சந்திர மண்டலத்திற்குப் பறந்து செல்லக் கண்டுபிடித்த வாண விமானம் போன்று இருக்கிறது. இரண்டுக்கு முள்ள வித்தியாசம் யாதெனில் இது ஆகாயத்தில் பறந்து செல்லாமல் தரையில் ஓடுகிறது. இது செல்லும் வேகத்தைப் பார்த்தால் தரையில் பறந்து செல்லுவது போலவே தோன்றும். இது மணிக்குச் சாதாரணமாக 100-மைல் ஓடியது. இவ்வண்டியின் நீளம் 85 அடி. இவ்வண்டிக்கு 400-குதிரை வேகமுள்ள ஆகாய விமான மோட்டார் இஞ்சினை இணைத்திருந்தார். இவ்வண்டி புறப்பட்டதும் 60-மைல் வேகத்தில் சென்றது. புறப்பட்ட சில விநாடிகளுக்குள் படிப்படியாய் அதிக வேகமாக ஓட ஆரம்பித்து மணிக்கு 114-மைல் வேகத்தில் ஓடியது. இவ்வளவு வேகமாக ஓடியும் இவ்வண்டியை வெகு எளிதில் நிறுத்தி விட்டனர்.

இவ்வண்டிக்கு இன்னும் அதிக வேகமுள்ள இயந்திரத்தைப் பூட்டினால் இது எந்தவிதமான ஆபத்துமின்றிச் சாதாரணமாக மணிக்கு 180-மைல்-அதாவது நிமிஷத்திற்கு 3-மைல்—வேகத்தில் ஓடக் கூடுமாம்.

* * *

வட சீனாவில் குழந்தை பிறந்த உடன் அதற்குக் கண்கள் பெரும்பாலும் பச்சைநிறமாகவோ சிகப்பு நிறமாகவோ யிருக்கின்றனவாம்.

* * *

ஒரு யானையின் தும்பிக்கையில் 40,000 தசை நரம்புகளும், மனிதன் தேகத்தில் 527 தசை நரம்புகளு மிருக்கின்றன.

* * *

சென்ற இருபத்திரண்டு வருடங்களுக் குள்ளாக இங்கிலாந்திலும் வேல்ஸிலும் சுமார் 20-ஆயிரம் மதுபானக் கடைகள் குறைந்துவிட்டன.

* * *

நியூ சௌத்வேல்ஸ் என்னுமிடத்தில் ஒருபன்றிக் குட்டியின் வயற்றில் ஒரு ஜதை தங்க ஷர்ட் பொத்தான்களும், ஒரு தங்க காலர் பொத்தானும், ஒரு தங்க சேப்டி பின் ஊசியு மிருந்தனவாம்.

* * *

ஜப்பானில் நெல் வயல்களில் வேலை செய்யும் தொழிலாளிகள் ஜலதோஷத்தினின்றும் காத்துக் கொள்ள மனித உரோமத்தாலான ஸ்டாகிங்ஸ் அணிந்துகொள்வது வழக்கம்.

* * *

பழம் முதலியவற்றை அடக்கம் செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உபயோகிக்கப்படும் மரப் பீப்பாய்களுக்குப் பதிலாகக் காகிதப் பீப்பாய்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இதன் விலை மர பீப்பாய் விலையில் மூன்றிலொரு பாகந் தானாகிறது.

* * *

புலாவயோவிலுள்ள பிகாடி என்னும் ஒருவகை மரங்களின் பட்டைகளி லிருந்து நீர் வடிவது மழை பெய்வதைக் குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது. இம்மரங்கள் மழை வருவதற்கு ஒன்பது நாட்களுக்கு முன்னிருந்தே நீர் வடிக்கின்றன.

* * *

லினன் என்னும் மெல்லிய சல்லாத்துணி நெய்யும் கைத்தொழிலை முதன் முதலில் 1700-ம் வருடத்தில் பெய்ஸ்லி என்னுமிடத்துக் கருகில் கிரிஸ்டியன் ஷாவென்னும் பெண்தான் கண்டுபிடித்தனளாம்.

[95 - வது பக்கத் தொடர்ச்சி]

அகநானூறு, பரிபாடல், பத்துப்பாட்டு முதலியவற்றில் இவ்வூரைப்பற்றிச் சொல்லப்பட் டிருக்கிறது. பிற்காலத்தில் தேவாரத்திலும், அதற்குப் பின் அருணகிரிநாத ஸ்வாமிகள் அருளிச் செய்த திருப்புகழிலும் இது சிறப்பிக்கப்படுகிறது. மலையிலுள்ள கல் மிக உயர்ந்ததாக மதிக்கப்பட்டு வந்தபடியால் இது முற்காலத்தில் மதுரைக்கோயிலாதியாகப் பல கோயில்கள் கட்டுவதற்குப் பெரிதும் உபயோகப்பட்டு வந்தது. சமீப காலம் வரையில் இம்மலைக் கல்லைப் பொது ஜனங்கள் கட்டடங்களுக்காக உபயோகப்படுத்தி வந்தார்கள். சிவலிங்க ரூபமாகவுள்ள மலையின் வடிவம் சிதைந்துபோகக் கூடாதென்ற கருத்தோடு கல் பிளத்தல் முதலியவை அரசாங்கத்தாரால் நிறுத்தப்பெற்றன.

---



கோவையில் ஸ்ரீமதி பிளாக்ஸ்டன் என்ற அம்மாள் வளர்த்து வரும் பூனை சில அதிசய குணங்கள் வாய்ந்தது. டி. பி. கு' என்று கூப்பிட்டால் உடனே ஓடி வந்துவிடுமாம். தூரத்தில் இருந்தால் விசில் சப்தத்தைக் கேட்ட மாத்திரத்தில் வந்துவிடுகிறது. இதனுடைய வழக்கமான ஆகாரம் மீன், பால், கறி. ஆனால் வெள்ளிக்கிழமை யன்று மட்டும் கறி சாப்பிடுவதில்லையாம். மீன், பால் ஆகியவற்றையே அன்று சாப்பிடுமாம். ஆகாரம் குறையாய் இராவிட்டால் வேலை யாட்களுக்கு ஜாடை காட்டும். அவர்கள் நல்ல வார்த்தை சொல்லித் தடவிக்கொடுத்தால் அந்த ஆகாரத்தைச் சாப்பிட்டுவிடுமாம். பங்களாவிற்கு அன்னியரோ இதர பூனைகளோ வந்துவிடின், தனது எஜமானியின் கால்களைச் சுற்றிவருவதோடு தன், உரோமங்களைச் சிலிப்பிக்கொண்டு கொடூர பார்வையுடன் பார்க்குமாம். எஜமானி சமாதானப்படுத்தினாலொழிய தனது கொடூர பார்வையை விடாதாம். நேரத்தில் சாப்பாடு கிடைக்காவிட்டால் ஜாடை காட்டும். அல்லது சத்தம் போடும். எஜமானிக்கு உடம்பு அசௌக்கியமாய் இருப்பது அதற்குத் தெரிந்தால் அங்குமிங்கும் ஓடி அலையும்; வேலையாட்களை அணுகி, சப்தம் செய்யும். அதன் வயது 7; கண்ணின் நிறம் மஞ்சள். ரோமம் கருப்பு நிறம்; வாலின் நீளம் $1\frac{1}{8}$ அடி.

* * *

நியூயார்க் நகரில் சமீபத்தில் கட்டி முடித்த புது ஜியார்ஜ் வாஷிங்டன் பாலம்தான் உலகிலேயே அதிகப் பெரிய பாலமாகும். இதைக் கட்டி முடிக்கச் சுமார் 6 கோடி டாலர்கள் செலவாயினவாம். இப்பாலத்தின் வழியாக, நியூயார்க் நகரில் பல தெருக்களைக் கடந்து செல்ல முடியும். பாலத்தின் கீழ் எத்தனையோ ரோடுகள் போட்டிருக்கிறார்கள்.

* * *

பாரிசிலுள்ள பெண்கள் தங்களிடமுள்ள நாய்களின் மயிர் நிறத்திற்குத் தகுந்தபடி தங்கள் கூந்தலுக்கு வர்ணம் பூசிக் கொள்ளுகிறார்களாம்!

* * *

1930-ஆம் வருஷத்தில் பிரிட்டனில் 147,031 குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனராம். அதாவது அதற்கு முன்வருஷத் தொகையை விட 12,000-க்கும் அதிகமாம். இக்குற்றவாளிகளில் 2/5 பகுதியினர் 21-வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள்; 2/3 பகுதியினர் 30 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள். போது 30 வயதுக்குட்டவர்கள் மகாயுத்தத்தின் இப்போது சிறுவர்களாயிருந் திருக்கவேண்டுமாதலால் அப்போது சரியான கட்டுப் பாடும் மேற்பார்வையுமின்றி வளர்க்கப்பட்டதே இவர்கள் இந்நிலையடைந்ததற்குக் காரணமெனப் படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்துள்ள பாகங்களில் தான் குற்றவாளிகளும் அதிகமாகப் பெருகியிருக்கிறார்கள்.

* * *

அடக்குமுறையை இங்லண்டு குடிகட்கு விளக்குதற்காகப் பண்டித மாளவியா மேமாத மத்தியில் இங்லண்டுக்குப் போவாரெனத் தெரிகிறது.

---

## திருச்செந்தில்

### காடைக் காவடி மகத்துவம்

எட்டையாபுரம் ஜமீன் நடுவப்பட்டி செங்குந்த முதலியார் தெற்குத் தெருவி லிருக்கும் கழுகுமலை உலகநாத முதலியாருடைய கனவில் திருச்செந்தில் முருகன் தோன்றி, "எட்டையாபுரம் வடக்குத் தெருவில் வடசரகத்தில் தெற்குநோக்கிய வீட்டிலுள்ள சுப்பைய மணியகாரரிடம் சென்று அவருக்கு அகப்படும் காடைக் குருவிகளில் பஞ்சவர்ணப் புள்ளி யமைந்த இரண்டு காடைகளை வாங்கி வந்து உனது குமாரன் சண்முகனைக் காவடி முருகனாகச் செய்து ஆத்தூருக்கு அருகிலுள்ள தாம்பிரபர்ணி நதியில் காடைகளை அறுத்துச் சமைத்துக் கலசத்தில் முத்திரை செய்து பங்குனி உத்திர நாளன்று காலை ஒன்பது மணிக்கு எமது செந்தில் மாநகரம் வந்து சேர்க்கக் கடவை" யென்று உத்திரவிட, உலகநாத முதலியார் அதி வியப்புடன் சுப்பைய மணியகாரர் இரண்டு நாள் விரதமிருந்து பிடித்துத் தந்த பஞ்சவர்ணப் புள்ளிகளையுடைய இரண்டு காடைகளையும் தாம்பிரபர்ணி ஆற்றில் சமைத்து மண் கலசத்தில் முத்திரை செய்து கழுகுமலை சுந்தர பண்டாரம் முன்னிலையில் தமது குமாரன் பன்னிரண்டு வயதுள்ள சண்முகனுக்குச் கல்லடம், குல்லாய், திருநீறு, அக்கமாலை, பிரம்பு முதலியவைகளை அணிவித்துக் காவடியைத் தோளில் ஏற்றி அருட்பாடல் ஆடல்களுடனும் சங்கு செய கண்டி முதலிய வாத்திய முழக்கத்துடனும் பங்குனி மாதம் பத்தாந்தேதி காலை ஒன்பதுமணி யளவில் திருச்செந்தூர் அடைந்து முருகன் சந்நிதி சென்று சண்முக விலாசத்திலுள்ள வீரவாகு மூர்த்தியின் முன்னிலையில் உத்திரவுப் பிரகாரம் ஒரு கலச முத்திரையை அவிழ்த்து அருட்பார்வையுடன் ஆகாயத்தில் உயர்த்திப் பிடித்தனர். காடையோ உயிரற்றது போல் தோன்ற, அங்குக் குழுமி யிருந்த ஜனங்களில் சிலர் ஏச ஆரம்பித்தனர். உலகநாத முதலியார் அதிக வைராக்கியங் கொண்டவராய் முருகனைத் தியானித்துக் கரத்தால் தடவிக்கொடுத்து தண்ணீரை வார்த்தவுடன் தூங்கி விழிப்பதுபோல் காடை விழித்தது. மற்றொரு கலசத்தை யவிழ்த்த மாத்திரத்தில் அதிலிருந்த காடை உயிர்பெற்றெழுந்தது. காவடி முருகன் மடியில் சாந்த பார்வையும், குளிர்ந்த முகமும், பயமற்ற தன்மையு முடையனவாய்த் திகழ்ந்த இரண்டு காடைகளையும் ஆங்குள்ள அன்பர்கள் பார்வையிட்டு முருகபிரான் கிருபை அளவிட முடியாததென எண்ணி யெண்ணிப் பலவாறு தோத்தரித்தனர்.

# வெடிமருந்து

[வித்வான் G. தேவநேசன் அவர்கள்]

வெடிமருந்தாவது வெடிக்கின்ற மருந்து அல்லது சரக்கு. வேட்டு, வெடி என்பன ஒரு பொருட்கிளவி. அவை விள் என்னும் மூலத்தினின்றும் வெடிக்கின்ற ஒலியபற்றிப் பிறந்து திரிந்த பழஞ்சொற்கள். வெடிமருந்துகள் பெரும்பாலுங் கலவைகளா யிருக்கும். அக்கலவைகளில் ஒன்று கருமருந்து (Gun powder) என்பது.

இதுபோது போர்க்குண்டுகள் எத்துணையோ புதுமாதிரியாய்ச் செயப்படினும் அவை யெல்லாவற்றுக்கும் மூலம் கருமருந்தே யென்பது எவர்க்குந் தெரிந்திருக்கும். கந்தகம், கரி, வெடியுப்பு என்ற மூன்றன் கலவையே கருமருந்தாகும். இம்மூன்றும் இந்துமாநாட்டில் தொன்றுதொட்டுக் கிடைக்கின்றன. கரிய நிறத்தானும் மருந்து போலுந் தோற்றத்தானும் மருந்து சரக்காகிய கந்தகத்தின் சேர்க்கையானும் கருமருந்தெனப் பட்டது.

கருமருந்தின் பிறப்பிடத்தைப்பற்றி Encyclopædia Britannica என்னும் ஆங்கிலக் கலைகராதி பின் வருமாறு கூறுகின்றது :—

(Ninth Edition Vol XI பக். 317)

"கருமருந்தின் கிளைப் பிறப்பு—எல்லா அதிகாரிகளின் ஆராய்ச்சியும் கீழ்நாட்டையே கருமருந்து போன்ற ஒரு வெடி கலவையின் பிறப்பிடமாகச் சுட்டுவதாகத் தெரிகின்றது. அது அங்குத் தொன்றுதொட்டு வழங்கி வந்தது. ஆனால் அதைக் குண்டாக உபயோகித்த காலம் மிகப் பிந்திய தென்பதற்கு ஏதும் ஐயமின்று. இந்தியசீனப் பெருமைதானங்களில் ஏராளமாய் மண்ணோடு மண்ணுய்க் கலந்துள்ள வெடியுப்பின் சிறப்பியல்கள் தற்செயலாய்க் கண்டுபிடிக்கப்பட்டதே வெடிமருத்துவக் கலைக்குத் தொடக்கமா யிருந்திருக்கக்கூடும். அடுப்பெரிக்கும் விறகுக் கரியினுல் கருமருந்திற் சேரும் சரக்குகளில் வேகமிக்க இரண்டும் எளிதாய்க் கலப்பாகும். பின்பு நெருப்பின் தொழிலால் அவை விளக்கமாயேனும் மங்கலாயேனும் விரைந்தெரியும். வெடியுப்பு சில வேளைகளில் நிலக்கரியில் விழுந்துவிடுவதால் வியக்கத்தக்க விதமாய் அதை மிதமிஞ்சி எரியப்பண்ணுகின்றது. ஆகையால் வெடியுப்பும் கரியும் சேர்ந்த கலவையே யாதானுமொரு வேகத்துடன் வெடிக்குமென்பதை யாம் எளிதாய் உணரக்கூடும். கந்தகம் பிந்திச் சேர்க்கப்பட்டதே. அது வெடிப்பிற்கு வேண்டுவதன்று. நமது தற்காலத் துப்பாக்கி மருந்து அத்தகைய கலவையின் திருத்தமும் நிறைவுமே யன்றி வேறன்று" (மொழி பெயர்ப்பு)

கருமருந்தானது தென்னுட்டில் வாண வேடிக்கைக்கும் கிணறு வெட்டுக்குமாக இரு வகையிற் பயன்பட்டு வருகிறது. வாணம் சிறியோர்க் குரியவும் பெரியோர்க் குரியவுமாக இருவகைப்படும். அவற்றுட் சிறியோர்க்குரியன வேட்டுகளென்றும், பட்டாசு (பட்டென்று வெடிப்பது) என்றும், டப்பாசு (டப்பென்று வெடிப்பது) என்றும் பலவிடத்துப் பலவிதமாய்ப் பொதுப் பெயர் கொள்ளும். இக்காலச் சிறுர் வேட்டுகளெல்லாம் தீபாவளி முதலிய திருவிழாக் காலங்களில் ஜப்பான் நாட்டினின்றும் வரவழைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. ஜப்பான் வெடிகள் வருமுன்னர் நம்நாட்டுச் சிறுர் தாமே வெடிகள் செய்து வந்தனர். இக்காலத்தும் சில சிறுர் வெடியுப்பும் மஞேசிலையும் தனித்தனி அரைத்துச் சீனிக்கற்களுடன் சேர்த்துக் கல்வெடி செய்வதையும் கரித்தூளும் நெல்லுமியுஞ் சேர்த்துப் பொரிவாணஞ் செய்வதையும் கண்கூடாகக் காண்கின்ரேம். இங்ஙனஞ் செய்தற்கியலாத இளஞ்சிறுருங்கூடப் பொரிவாணஞ் சுற்றும் பாவனையாய், இருகைகளையும் நீட்டிக் 'கிறுகிறு வாணம் கின்னறு வாணம்' என்று சொல்லிக்கொண்டு சுற்றி விளையாடுவதை இளமைமுதற் கண்டிருக்கின்ரேம். சிறியோர் செய்வனவும் விளையாடுவனவு மெல்லாம் பெரும்பாலும் பெரியோர் செய்பவற்றைப் பின்பற்றியே யாம். (சிற்றில், சிறுதேர், மணற்சோறு, மண்ணைக்கட்டிக் கலியாணம் முதலியனவு மதற் குதாரணம்)

இனிப் பெரியோர்க்குரியன பொதுவாய் வாணங்களெனப்படும். அவை கம்பவாணம், கட்டுவாணம் (வாணக்கட்டு), ஈச்சவாணம், பொரிவாணம், காவடிவாணம், குதிரைவாணம், சேவல் வாணம், அவுட் (ஆங்கிலப் பெயர்) எனப் பலவகைப்படும். இவற்றை யெல்லாம் தென்னுட்டிற் றிருவிழாக் காலங்களில் சிறக்கக் காணலாம். இவற்றுட் பெரும்பாலன வடபாகங்களி லில்லை. (இக்கட்டுரை முழுதும் வடநாடு தென்னுடெனச் சுட்டுவதெல்லாம் சென்னை மாகாணத்தில் வடபாகத்தையும் தென்பாகத்தையு மென்றே தெரிந்து கொள்க.)

வாணமென்னுஞ் சொல் வடமொழியிற் பாணமெனத் திரியும். சில வகர முதற்றமிழ்ச் சொற்கள் வடமொழியிலும் அதன் தன்மை அமைந்த பிறமொழிகளிலும் பகரமுதற் சொற்களாகத் திரிதலியல்பு. வாத்தைப் பாத்தென்றும், வாடகையைப் பாடகை யென்றும், வண்டியைப் பண்டியென்றும் கூறுவர் தெலுங்கர். தெலுங்கு ஒரு கொடுந்தமிழ் மொழியேனும் இலக்கண விலக்கியச் சார்பினுல் வடமொழித் தன்மை சான்றது. வாணமென்பதற்கு அம்பென்பது பொருள். வாளி யென்பது வாளம், வாணம் எனத் திரிந்தது. அதற்கு வளைந்தது, ஒளியுள்ளது வாலுள்ளது என்பன பொருளாம். இவற்றுள் முன்னதற்கு வள் பகுதி; இடையதற்கு வாள் பகுதி; கடையதற்கு வார் பகுதி. கடகாலின் வளைந்த பிடிக்கு வாளி யென்று பெயர். பின்னர் அது சினையாகு பெயராய் அல்லது தானியாகு பெயராய் அக்கடகாற்கே ஆகி வந்தது.



"வாளொளியாகும்"

"வார்தல்* போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள்"

என்பன தொல்காப்பியம்.

இவற்றுட் பின்னிரண்டும் சிறந்தவை. பிறைபோல் வளைந்த முகத்தையுடைய பிறைமுகம் என்னுமோர் அம்பு முன் காலத்தில் வழங்கினதேனும் அது வாளியென்னும் பெயர்க்குக் காரணமாயிற்றென்னல் அத்துணைப் பொருத்தமுடைத்தன்று. வாணம் முன் காலத்தில் அம்புபோலப் போர் முனையில் வழங்கப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது. அதனையே அக்கினி யஸ்திரமெனப் புராணங்கள் கூறுகிற்கும். இனி, அதற்கினமான வாயுவஸ்திரம் வருணஸ்திரம் முதலியவும் கூறப்படுகின்றன. அவற்றை இனமுறையிற் கூறிய இல்பொருளாகவே கொள்ள வேண்டும். இக்கால முறைப்படி அவற்றை முறையே நச்சுக் காற்று (Poisonous gas) என்றும், நச்சுப் புனல் (liquid poison) என்றும் கூற இடமிருப்பினும் பொருந்தாது. கண்ணபிரானெடு சண்டை செய்த வாணசுரன் என்பவன் பலவகை வாணங்களை விட்டதாகத் தெரிகின்றது. இராமாயணத்திலும் நாகாஸ்திரம், பிரமாஸ்திரம் முதலிய வாணச் சிறப்புக்கள் கூறப்படுகின்றன.

தென்னுட்டுப் பழம்போர்த் துறைகளை விரித்துக் கூறும் தொல்காப்பியத்தில் வாணத்தைப்பற்றி ஓர் குறிப்பு மின்று. உழிஞைப்போரில் நெடுநாள் முற்றியும், அத்தோன் வருபகை பேணு ஆரெயிலின்கண், ஊர் சுடுவதற்காகப் புறத்தோன் கட்டு வாணங்களை வழங்காவிடினும் எயிலோரம் ஒரு கம்ப வாணத்தை நட்டுக் கொளுத்தின், புறத்தோன் கருதியது எங்ஙனம் கைகூடுமென்பது எவர்க்கும் புலனுகும். இது 'முரணிய புறத்தோன் அணங்கிய பக்கத்துள்' அடங்கும். அஃதேல், தொல்காப்பியத்துள் இஃதேன் கூறப்படவில்லை யெனின், போர் முனையிற் செய்யப்படுவதெல்லாம் ஓர் இலக்கணநூலிற் கூறப்படா வென்றும், உறு மனத்தானும் உடல்வலியானும் செய்யும் மறப்போரைச் சிறப்பித்துக் கூறுவதே தொல்காப்பிய நோக்கமென்றும், பல வினைத்தொகுதிகளான துறைகளையே தொல்காப்பியங் கூறுமென்றும், உழிஞைப்போரில் ஒரோவிடத்துச் சிறுபான்மை நிகழ்வதொன்றை நியதியாகக்கூற லொவ்வாதென்றும், ஒருகால் நிகழின் அஃது 'அணங்கிய பக்க'த்துள் அடங்குமென்றுங் கூறி விடுக்க. வாணம் நெருப்பின் தொழிலன்றி வயவர் மறமன்று; அது உம் இராப் போர்க்கே சிறப்புடைத்து.

*வார்—வால் (போலி)



கிணறு வெட்டு

இனி, கிணறு வெட்டுக்குக் கருமருந்தைப் பயன்படுத்துவதும் தொன்றுதொட்டு வந்த வழக்காகும். சோணுடு காவிரிப் பேரியாற்றுப் பாய்ச்சலானபடியால் பாண்டி நாடுபோல் கிணற்றுநீரை வேளாண்மைக்கு வேண்டுவதன்று. சோணுடு முழுமையும் பொன்னிநாடு, புனனுடெனப் பட்டமையே அதைப் புலப்படுத்தும். குமரிநா டமிழ்ந்தபின் வைகையும் பொருநை (தாமிரபரணி)யுமே பாண்டி நாட்டியாறுக ளாதலானும், அவை காவிரி போலப் பேரியாறுகளன்மையானும், நெட்டிடையிட் டிருத்தலானும், பாண்டிநாட்டின் பெரும்பாகப் பயிர்த்தொழில் கிணற்றிறைவையாலேயே நடந்து வருகின்றது. ஆற்றுப் பாய்ச்சலில்லாவிடங்களிற் குளங்க ளிருப்பினும், அவை மழையின்றி நிரம்பாமையானும், நிரம்பினும் விரைந்து வற்றுகின்றமையானும், அவ்வவ்வூர்ப் பாய்ச்சலுக்குப் போதாமையானும் கிணற்று நீர் இன்றியமையாததா யிருக்கின்றது. சோணுட்டார் காவிரியாற்றையே பெரிதும் நம்பி யிருத்தலின், பாண்டி நாட்டார்போல உழவுத் தொழிலை உழந்து செய்ய வேண்டியதில்லை. ஒரோவழி வேண்டிய திருப்பின் உழந்து செய்வதுமில்லை. பயிர்த் தொழிலுக்குப் பாண்டி நாட்டுழவர்க்குள் மட்டும் வழங்கி வரும் 'பாடுபடுதல்' என்னும் குறியீடே இதைப் புலப்படுத்தும். சோணுட்டார் காவிரிப் பாய்ச்சலின்றி நெல் விளைப்ப தருமை. பாண்டி நாட்டாரோ குளம் வற்றியக்காலும் கிணற்று நீரால் நன்செய் விளைவும் புன்செய் விளைவும் விளைக்கின்றனர். நன்செய் விளைவினும் புன்செய் விளைவு தென்னுட்டிற் சிறந்திருப்பதே அங்குள்ள நீர்க்குறைவையும் கிணற்றிறைவையையும் புலப்படுத்தும். இன்றைக்கும் தென்னுட்டுழவர்க்கு அவ்வக்கால உணவாயுள்ள சாமை, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய கூலவகைகள் வடநாட்டார்க்கு என்னவென்றே தெரியவில்லை. கிணறுகள் வடபாகங்களில் தென்னுட்டிற்போல ஏராளமாயும் அகன்றும், சமுக்கமாயுமிராமல், சிலவாயும் சிறியவாயும் வட்டமாயு மிருக்கின்றன. கிணறுகள் அகன்ற சதுரங்களாயிருப்பின் ஆழமாய்த் தோண்டவும், பக்கத்திற்கொரு கமலை போடவும் உதவும்.

தென்னுட்டின் பெரும்பாகம் ஆற்ரேரமா யின்மையானும், அடிப்படை கற்பாங்கானமையானும், கிணறு வெட்டுவதற்கு ஆழமாகத் தோண்டவும் கற்பாறைகளைப் பெயர்க்கவும் வேண்டி யிருக்கிறது. அது இருப்புப்பாரை கூந்தாலம் முதலிய கருவிகளாற் கூடாமையின் வெடிமருந்தின் உதவி வேண்டியதா யிருக்கிறது. கற்பாறையில் ஒரு சுரங்கம் தோண்டி அதற்குள், வெடிகுழாய்க்குட் செலுத்துவதுபோல், கருமருந்தையும் கரம்பையையுஞ் செலுத்தி நெருப்பை வைக்கிருர்கள். அது பேரொலியுடன் வெடித்துப் பெருவலியுடன் புடைசூழ்ந்த பாறைகளை யெல்லாம் படபடையாகப் பெயர்த்து விடுகின்றது. இதே முறையில்தான்

# சந்தா வரவு

காரியாலயத்தில்
நேரில் செலுத்தப்பட்டவையும்
மணியார்டர் மூலம் அனுப்பப்பட்டவையும்

| | | | |
|---|---|---|---|
| **வடதிருநாகேஸ்வரம்** | | | |
| ச. மு. சமரபுரி முதலியார் | 1 | 8 | 0 |
| சி. ஜெகநாத முதலியார் | 1 | 8 | 0 |
| **ரங்கோன்** | | | |
| N. முத்துலிங்க முதலியார் | 1 | 8 | 0 |
| R. M. தியாகராஜ முதலியார் | 1 | 0 | 0 |
| **சித்தூர் பாலக்காடு** | | | |
| A. பழனியப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| A. கிருஷ்ண முதலியார் | 1 | 8 | 0 |
| **புதூர் வேலநத்தம்** | | | |
| வா. வெ. ராமசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| **ஈரோடு** | | | |
| V. M. மொட்டையப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| **காட்டுப் பாளையம்** | | | |
| கு. முத்துசாமி முதலியார் | 4 | 8 | 0 |
| **நீலமலைக் கோட்டை** | | | |
| பெரியதனம். அங்கப்ப முதலியார் | 1 | 4 | 0 |
| **சென்னை** | | | |
| T. M. காளியப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| **சூரியம் பாளையம்** | | | |
| A. சோமசுந்தர முதலியார் | 1 | 8 | 0 |
| **கலவை** | | | |
| கை. கி. சுந்தரேச முதலியார் | 3 | 0 | 0 |
| பூ. பே. பொன்னுசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| **நாகப்பட்டணம்** | | | |
| A. P. முத்துகுமாரசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| **புதுச்சேரி** | | | |
| A. V. முத்தையா முதலியார் | 3 | 0 | 0 |
| S. P. அண்ணாமலை முதலியார் | 1 | 8 | 0 |
| **சிலோன்** | | | |
| கார்த்திக்கேசு முதலியார் | 1 | 8 | 0 |
| கல்முனை. T. ராஜேஸ்வர முதலியார் | 3 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| **தட்டப்பாறை** | | | |
| M. துரைசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| **அல்லப்பாளையம்** | | | |
| A. நயினுப்பிள்ளை | 1 | 8 | 0 |
| **எடமணல்** | | | |
| S. சுப்பிரமணிய முதலியார் | 3 | 0 | 0 |
| **இரணியூர்** | | | |
| தில்லை. கோவிந்த முதலியார் | 1 | 8 | 0 |
| **பரங்கிமலை** | | | |
| ஆ. பொன்னுசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| **சைதாப்பேட்டை** | | | |
| கொ. சிவலிங்க முதலியார் | 1 | 8 | 0 |
| S. N. சீனிவாச முதலியார் | 1 | 8 | 0 |
| செ. ஆறுமுக முதலியார் | 4 | 0 | 0 |
| M. எத்திராஜ முதலியார் | 1 | 8 | 0 |
| **கூடப்பாக்கம்** | | | |
| S. நடராஜ முதலியார் | 1 | 8 | 0 |
| **வடவழி** | | | |
| C. முத்துசாமி முதலியார் | 1 | 13 | 0 |

தலைச்சங்கப் பிரசாரகர்கள் பி. சே. மா. தி. அ. ச. அவர்கள் மூலம் வசூலான சந்தா தொகை

| | | | |
|---|---|---|---|
| **திருச்சி** | | | |
| P. A. அருணசல முதலியார் | 3 | 0 | 0 |
| V. A. முருக முதலியார் | 1 | 8 | 0 |
| பொ. நல்லப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| ரா. ப. குத்தாலலிங்க முதலியார் | 1 | 8 | 0 |
| **ஸ்ரீரங்கம்** | | | |
| S. நல்லப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| S. அருணசல முதலியார் | 3 | 0 | 0 |
| P. பெரியண்ண முதலியார் | 3 | 0 | 0 |
| A. C. கணபதி முதலியார் | 2 | 6 | 0 |
| P. கன்னியப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| **திருவானைக்காவல்** | | | |
| இராஜமுத்து முதலியார் | 1 | 8 | 0 |

(99-வது பக்கத் தொடர்ச்சி)

திருவிழாச் சிறப்பிற்குப் போடும் பிடாங்கு வேட்டும் வெடிக்கின்றது. பிடாங்கு ஒலிபற்றிய சொல் பிள் என்னும் மூலத்தினின்றும் பிடுங்கு என்னும் பகுதியினின்றும் பிறந்தது. தென்னாட்டில் எல்லாக் கிணறுகளும் சுரங்க வேட்டாலேயே வெட்டப்படுகின்றன. சில கிணறுகள் மிகப் பழமையாயிருப்பதுபற்றி, இவ்வழக்கமும் பண்டு தொட்டே வந்திருத்தல் வேண்டும். கிணறு என்ற பெயர் மிகப் பழைய நூல்களிற் காணப்படாவிடினும், அதற்கினமான கேணி என்னும் பெயர் காணப்படுகின்றது. கேணி, கிணறு என்னுமிரண்டும் கீள் என்னும் பகுதியினின்றும் பிறந்து திரிந்தவை. (கல்—கில்—கீள்=தோண்டு) கற்பாங்கான இடத்தில் வெட்டப்பட்டதே பண்டு கேணி யெனப்பட்டது. திருவிளையாடற் புராணத்திற் கேணி யென்னுஞ் சொல் நிகழ்கின்றது (வன்னியுங் கிணறு மிலிங்கமுமழைத்தது). மக்கள் பெருகாத முன் காலத்தில் யாற்று வளமுள்ள மருத நிலங்களிலேயே உழவர் குடியிருந்தனர். மக்கள் பெருகவே, யாறில்லா நிலத்தும் உழவர் உறைய வேண்டியதாயிற்று. அதனாலேயே கிணறுகளும் வேண்டியவாயின.

இதுகாறுங் கூறியவற்றால், வெடிமருந்து தென்னாட்டிலேயே தோன்றியதென்றும், அது முதலாவது வாணமாகப் போருக்குப் பயன்படுத்தப்பட்டதென்றும், அதன் பின்னரே அது வேடிக்கைக் காயிற்றென்றும், கிணறுண்டான காலந் தொட்டுப் பாறை பெயர்க்கவும் உதவி வருகிறதென்றும் தெரிந்துகொள்க. துப்பாக்கியும் பீரங்கியும் பிற குண்டுகளுமே மேனாட்டாராற் பிற்காலத்துச் செயப்பட்டவை.



| | | | |
|---|---|---|---|
| **பொன்மலை** | | | |
| P. V. ஆறுமுக முதலியார் | 3 | 0 | 0 |
| M. வீரபத்திர முதலியார் | 1 | 8 | 0 |
| **மண்ணச்ச நல்லூர்** | | | |
| ம. சோ. சந்தியப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| செ. பெ. வீ. பொன்னுசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| பூ. க. அம்பலவாண முதலியார் | 3 | 0 | 0 |
| ஆ. மு. ரத்தின முதலியார் | 1 | 8 | 0 |
| கொ. க. பிச்சையப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| ச. அ. மு. முத்துசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| வீ. பெ. இரத்தின முதலியார் | 1 | 8 | 0 |
| செ. பெ. சி. அப்பாவு முதலியார் | 3 | 0 | 0 |
| செ. சி. மொட்டையப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| செ. பெ. சி. பழனியாண்டி முதலியார் | 3 | 0 | 0 |
| ச. அ. சந்தியப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| சி. பொ. பிச்சையப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| செ. பெ. சி. நடேச முதலியார் | 3 | 0 | 0 |
| செ. கூ. கணபதி முதலியார் | 3 | 0 | 0 |
| செ. பெ. சி. குஞ்சி முதலியார் | 1 | 8 | 0 |
| தா. கோவிந்த முதலியார் | 3 | 0 | 0 |
| சி. அங்கப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| மா. ராஜலிங்க முதலியார் | 1 | 8 | 0 |
| க. சி. மூக்க முதலியார் | 3 | 8 | 0 |
| **துறையூர்** | | | |
| ஆ. வீ. வீரப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| ப. மூக்க முதலியார் | 4 | 8 | 0 |
| கெ. அ. முருக முதலியார் | 3 | 0 | 0 |
| மா. ஆறுமுக முதலியார் | 3 | 0 | 0 |
| வீ. வெ. ராமசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| பழனியாண்டி முதலியார் | 3 | 0 | 0 |
| சி. வெ. கருப்பண்ண முதலியார் | 3 | 0 | 0 |
| கரு. கருப்ப முதலியார் | 4 | 8 | 0 |
| தா. க. பெருமாள் முதலியார் | 4 | 8 | 0 |
| த. ச. வீ. சபாபதி முதலியார் | 3 | 0 | 0 |
| தா. சோ. மு. வயிரப் பெருமாள் முதலியார் | 3 | 0 | 0 |
| மு. ஆறுமுக முதலியார் | 3 | 0 | 0 |
| மோ. மாரிமுத்து முதலியார் | 4 | 8 | 0 |
| வீ. ப. செ. மு. வீரப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| ஆ. வெள்ளைய முதலியார் | 3 | 0 | 0 |
| பி. மு. பழனியாண்டி முதலியார் | 3 | 0 | 0 |
| க. மு: பிரசன்னமூர்த்தி நாயுடு | 3 | 0 | 0 |
| **தாத்தையங்கார் பேட்டை** | | | |
| ச. பொன்னுசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| ரா. க. ராமசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| பூ. சு. சங்கர முதலியார் | 3 | 0 | 0 |
| ஓ. தோ. மூ. ப. செங்கமல முதலியார் | 1 | 8 | 0 |
| **ஆங்கியம்** | | | |
| மு. துரைசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| ஆ. குழந்தைவேல் முதலியார் | 1 | 8 | 0 |
| **மேட்டுப் பாளையம்** | | | |
| தெ. வே. ஆனை முதலியார் அண் சன்ஸ் | 4 | 8 | 0 |
| க. சி. முத்துசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| சு. மு. பெ. திருப்பதி முதலியார் | 1 | 8 | 0 |
| சொ. வை. சொக்கலிங்க முதலியார் | 1 | 8 | 0 |
| [illegible] முதலியார் | 3 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| ஊ. கு. மாரிமுத்து முதலியார் | 3 | 0 | 0 |
| செ. குழந்தைவேல் முதலியார் | 3 | 0 | 0 |
| வீர. சந்தியப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| காரியம். வை. சந்தியப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| ச. பழனியாண்டி முதலியார் | 3 | 0 | 0 |
| **உன்னியூர்** | | | |
| மோ. மு. ந. முத்துசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| பு. செ. மு. கந்தசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| கு. ஆ. பாலசுப்பிரமணிய முதலியார் | 3 | 0 | 0 |
| ப. மாரியப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| ப. க. பழனியப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| நெ. நாச்சி முதலியார் | 3 | 0 | 0 |
| R. மாணிக்க முதலிரார் | 1 | 8 | 0 |
| கொ. தே. வை. வேலாயுத முதலியார் | 1 | 8 | 0 |
| ம. செ. பெரமாண்ட முதலியார் | 3 | 0 | 0 |
| கு. பெ. ராமசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| M. R. முத்துவீரப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| கா. ஆ. அருணசல முதலியார் | 3 | 0 | 0 |
| ஜோ. கா. முருக முதலியார் | 3 | 0 | 0 |
| தி. ப. ஆ. சடையப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| அ. கு. ச. சின்னசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| ஆ. ரூ. மு. முருக முதலியார் | 3 | 0 | 0 |
| வெ. முருக முதலியார் | 3 | 0 | 0 |
| கொ. ரா. மாணிக்க முதலியார் | 3 | 0 | 0 |
| து. வே. செ. செல்லாண்டி முதலியார் | 3 | 0 | 0 |
| மு. அ. கந்தசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| கூ. பெ. முத்துசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| **ஒருமந்தூர்** | | | |
| அ. நல்லண்ண முதலியார் | 1 | 8 | 0 |
| வ. செ. முத்துசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| **மோகனூர்** | | | |
| ச. கு. பழனியாண்டி முதலியார் | 3 | 0 | 0 |
| ப. மாணிக்க முதலியார் | 1 | 8 | 0 |
| கு. ரூ. பனியப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| வே. முருக முதலியார் | 1 | 8 | 0 |
| M. R. சபாபதி முதலியார் | 1 | 8 | 0 |
| கு. ல. சடையப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| சி. மாணிக்க முதலியார் | 1 | 8 | 0 |
| **பாண்டமங்கலம்** | | | |
| கு. ம. இராஜலிங்க முதலியார் | 1 | 8 | 0 |
| ரா. அருணசல முதலியார் | 1 | 8 | 0 |
| மா ரா. ரத்தின முதலியார் | 1 | 8 | 0 |
| ந. கந்தசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| அ' சங்கர முதலியார் | 1 | 8 | 0 |
| மா. ரத்தின முதலியார் | 1 | 8 | 0 |
| அ. சென்னியப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| அ. வேலாயுத முதலியார் | 1 | 12 | 0 |
| ச. பழனியாண்டி முதலியார் | 1 | 8 | 0 |
| பா. கா. வீரப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| மு. பழனியப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| R. S. சுப்பிரமணிய முதலியார் | 3 | 0 | 0 |
| க. குழந்தைசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| ஆ. கு. பழனியப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| **ஊஞ்சபாளையம்** | | | |
| கு. நாச்சி முதலியார் | 3 | 0 | 0 |
| பொன்னுசாமி முதலியார் | | | |

800 009 1582

| | | | |
|---|---|---|---|
| **வேலூர்** | | | |
| கு. ஆ. ராமசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| கா. நல்லண்ண முதலியார் | 1 | 8 | 0 |
| மா. அருணாசல முதலியார் | 4 | 0 | 0 |
| க. நாராயணமுதலியார் | 1 | 8 | 0 |
| M. முருக முதலியார் | 1 | 8 | 0 |
| மு. மாரியப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| செ. ந. கருப்பண்ண முதலியார் | 1 | 8 | 0 |
| **கட்டிபாளையம்** | | | |
| சு. ஆறுமுக முதலியார் | 3 | 0 | 0 |
| சி. கு. மா. சிவகிரி முதலியார் | 3 | 4 | 0 |
| தி. க. ஆறுமுக முதலியார் | 3 | 0 | 0 |
| **திருக்காடுதுறை** | | | |
| ரா. வடமலை முதலியார் | 3 | 0 | 0 |
| செ. மு. கருப்பண்ண முதலியார் | 1 | 8 | 0 |
| **கரூர்** | | | |
| A. அண்ணாமலை முதலியார் | 4 | 8 | 0 |
| கோ. தெ. ராமசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| கு. பழனியப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| சி. சொக்கலிங்க முதலியார் | 1 | 8 | 0 |
| அ. சு. அருணாசல முதலியார் | 1 | 8 | 0 |
| அ. சு. மாரியப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| சு. மு. வெள்ளைய முதலியார் | 3 | 0 | 0 |
| P. பழனியப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| மொ. மாணிக்க முதலியார் | 3 | 0 | 0 |
| அ. குப்புசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| மு. ஆறுமுக முதலியார் | 3 | 0 | 0 |
| **எலவனூர்** | | | |
| சி. பெரியசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| பொ. கருப்பண்ண முதலியார் | 6 | 0 | 0 |
| P. C. பொன்னம்பல முதலியார் | 3 | 0 | 0 |
| தி. சி. கொழுந்தையப்ப முதலியார் | 8 | 0 | 0 |

# கிளர்ச்சி

## திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கம்

ஷை சங்கத்தின் சார்பாக 1932-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 17-ம் நாள் வியாழக்கிழமை (ஸ்ரீ கபாலீச்சுரர் திருவிழாவின் ஐந்தாம் நாள்) இரவு 10 மணிக்கு ஸ்ரீ வெள்ளீச்சுரர் ஆலயத் திருக்கல்லியாண மண்டபத்தில் சித்தாந்த உதவி பத்திராசிரியர் சைவத் திருவாளர் வி. உலகநாத முதலியார் அவர்கள் மாபெருந் தலைமையில், புராணிகர் திருவாளர் ம. கந்தசாமி முதலியார் அவர்களும், புராணிகர் திருவாளர் கி. வை. துரைக்கண்ணு பிள்ளை அவர்களும் முறையே "திருஞானசம்பந்தர்", "வையகந் தோறும் தெய்வந் தொழு" எனும் விஷயங்களைப் பற்றி நீண்ட சொற்பொழிவுக ளாற்றினார்கள். தலைவர் முடிவுரை கூறியதும் வந்தனோபசாரத்துடன் 1 மணிக்குக் கூட்டமினிது கலைந்தது.

---

## சைதாப்பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்

10-4-32 அன்று ஷை சங்கத்ினாதரவில் திரு. S. T. நடேச முதலியார் தலைமையில் திரு. S. ராஜகோபால அய்யர் பி. ஏ. அவர்கள் திருப்புகழைப் பற்றி வெகு அழகாக உபந்யசித்தார்கள்.

---

## செங்குந்த இளைஞர் சங்கம், மதுரை

4-4-32-ல் சங்கத்தின் பொதுக்கூட்டம் தலைவர் நா. பழனிக் குமாரு முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம், வாசகசாலையின் கீழ்க்கும் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கப் பெற்றன.

1-10-30 தேதி முதல் 31-3-32 தேதி முடிய

| | |
|---|---|
| சந்தா வரவு | ரூ. 94–15—0. |
| இளைஞர் சங்க வரவு | ரூ. 34—4—0. |
| நன்கொடை, ஆதாய வரவு | ரூ. 28—1—0. |
| மொத்த வரவு | ரூ. 157—4—0. |
| லைப்ரேரியன் சம்பளம், பத்திரிகைச் சந்தா, தபால், சாதல் வார் வகையறாச் செலவு | ரூ. 154—5—0. |
| அ. பழனிவேலு முதலியார் | ரூ. 1–14—0. |
| இருப்பு | ரூ. 1—1—0. |
| மொத்தம் | ரூ. 157—4—0. |

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

(2) காலஞ் சென்ற தமது இளைய சகோதரர் (கல்லூரி மாணவர்) திரு. சி. இராமலிங்கம் அவர்களின் வருடப் பூர்த்தி ஞாபகார்த்தமாக லயன் காபி அண்டு டீ சப்ளை கம்பெனி சொந்தகாரான உயர் திரு. சி. பொன்னம்பலம் முதலியார் அவர்கள் அளித்த நன்கொடை ரூ. 2-க்காக வந்தனமும் நன்றியும் செலுத்தல்,

(3) இந்நகர் இரண்டாவது வார்டில் செங்குந்தர்கள் மிகுதியும் வசிக்கும் தெருக்களான மதிச்சியம் வடக்குத் தெரு, தெற்குத் தெரு, தல்லாக்குளம் மூக்கப்பிள்ளை 1,2,3 நெ. தெருக்கள், நடுத்தெரு இவைகளிலுள்ள சாக்கடைத் தொட்டிகளிலுள்ள தண்ணீரை முனிசிபல் சிப்பந்திகள் சரிவர எடுப்பதில்லை யாகையால், ஷை தொட்டிகளிலுள்ள தண்ணீர் நிரம்பிப் பொது ஜனங்கள் நடமாடுமிடங்களில் வழிந்தோடிச் சுகாதாரக் கேட்டையும் தொத்து வியாதிகளையும் உற்பத்தி செய்து வருவதை வருத்தத்துடன் கனம் ஸ்பெஷல் ஆபீசரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு இக்குறையை நிவர்த்திக்கப் போதுமான சாக்கடைகளை அத்தெருக்களில் கட்டுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யக் கேட்டுக்கொள்ளுகிறது. அதுவரை சாக்கடைத் தொட்டிகளிலுள்ள தண்ணீரை உடனுக்குடன் அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும் வேண்டிக்கொள்ளுகிறது.



பிரஜோற்பத்தி௵ ஆவணி௴ 14௳ கலவை திரு. த. பரசுராம முதலியாருக்கும் காஞ்சி ஐயங்கார் பாளையம் P. கச்சியேகம்ப முதலியார் புத்திரி திருநிறை செல்வி பெருந்தேவி யம்மாளுக்கும் நடந்தேறிய திருமணத்தில் பிள்ளை வீட்டார் 8 அணாவும் பெண் வீட்டார் 8 அணாவுமாக வழங்கிய நன்கொடை. ரூ. 1—0—0.

ஷை ௵ வைகாசி௴ 25௳ கலவை தி. க. குமாரசாமி முதலியார் திருமகன் நாதமுனி முதலியாருக்கும் வாழப்பந்தல் சிவாநந்த முதலியார் பௌத்திரியும் சரவண முதலியார் குமாரத்தியுமான திருநிறை செல்வி மீனாக்ஷி யம்மைக்கும் நடந்தேறிய திருமணத்தில் வழங்கப்பட்ட நன்கொடை. ரூ. 1—0—0.

மேல புவனகிரி திரு. சி. ப. அருணாசல முதலியார் அவர்கள் புத்திரர் திரு. சுப்பிரமணிய முதலியாருக்கும் ஷையார் மைத்துனர் திரு. தெ. வீ. ஆறுமுக முதலியார் அவர்கள் புத்திரி கமலாம்பாளம்மாளுக்கும் 9-11-31-ல் கார்த்திகைத் திங்கள் 14-ம் நாள் ஆதிவாரத் தன்று நடந்தேறிய திருமணத்தில் ஆசிகூறி திரு. கு. சு. ம. குப்புசாமி முதலியார் மூலம் வழங்கிய நன்கொடை. ரூ. 1—0—0.

## கீழையூர் அ. சோக்கலிங்க முதலியார் மூலம் நன்கொடை வரவு

பிரஜோற்பத்தி௵ மார்கழி௴ 26௳ ஆதிவாரம் செம்பனார் கோவில் கீழத்தெருவு, திரு. ம. ஆ. சின்னதம்பி முதலியார் சிரேஷ்ட குமாரத்தி, ஸ்ரீமதி மங்களத்தம்மாளுக்கு நடைபெற்ற வளையற் காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடை அளிக்கப் பெற்றது. ரூ. 1—0—0.

ஷை தேதியில் தென் திருநாகேஸ்வரம் தெற்கு வீதி திரு. ரா. சீனுவாச முதலியார் குமாரத்தி, முத்துலெக்ஷிமி அம்மாளுக்கு நடந்தேறிய வளையற் காப்பு முகூர்த்தத்தில் நன்கொடை யளித்தது. ரூ. 0—8—0.

ஷை ௵ புரட்டாசி௴ 27௳ கீழையூர் திரு. ச. வெங்கிடாசல முதலியார் புதல்வி, ஸ்ரீமதி இரஞ்சிதத்தம்மாள் புஷ்பதி மங்கள ஸ்நானத்தன்று நன்கொடையாக அளிக்கப்பெற்றது. ரூ. 0—8—0.

ஷை ௵ தை௴ 4௳ ஞாயிற்றுக்கிழமை கூரைநாடு சின்ன எரகலித் தெருவு மு. அருணாசல முதலியார் மனைவி, ஸ்ரீமதி அன்னத்தம்மாளுக்கு நடைபெற்ற வளையற் காப்பு முகூர்த்தத்தில் நன்கொடை அளித்தது. ரூ. 0—8—0.

பிரஜோற்பத்தி௵ தை௴ 28௳ திருநாகேஸ்வரம் வடக்கு வீதி ஜோசியம் ச. சாமிநாத முதலியார் அவர்கள் குமாரத்தி, ஸ்ரீமதி சாலாக்ஷி அம்மாளுக்கு நடைபெற்ற வளையற் காப்பு முகூர்த்தத்தில் நன்கொடை அளிக்கப்பெற்றது. ரூ. 1—0—0.

பிரஜோற்பத்தி௵ தை௴ 29௳ திருநாகேஸ்வரம் வடக்கு வீதி மு. சுப்பிரமணிய முதலியார் குமாரர் பஞ்சநாத முதலியாரவர்களுக்கு நடந்தேறிய திருமணத்தின் ஞாபகார்த்தமாக நன்கொடை வழங்கியது. ரூ. 1—0—0.

பிரஜோற்பத்தி௵ தை௴ 10௳ மாயவரம் தாலூக்கா மேலப் பெரும்பள்ளம் ஜவுளி வியாபாரம் தலைஞாயரு சா. ரூக முதலியார் திருவனார் செல்வன் சிரஞ்சீவி தக்ஷிணாமூர்த்திக்கு கர்ணபூஷண சுபமுகூர்த்தம் நடைபெற்றதில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. ரூ. 1—0—0.

பிரஜோற்பத்தி௵ பங்குனி௴ 2௳ புருகாபேட்டை சி. அருணாசல முதலியார் சகோதரர் தங்கவேலு முதலியாருக்கும் தாடாளங் கோவில் திரு. ஆறுமுக முதலியார் குமாரத்தி, ஸ்ரீமதி அலமேலு அம்மாளுக்கும் மிக்க விமரிசையாக நடந்தேறிய திருமணத்தில் நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கி யுள்ளது. ரூ. 1—0—0.

பிரஜோற்பத்தி௵ மாசி௴ 27௳ கூரைநாடு கோவில் தெருவு ம. சா. சிங்காரவேலு முதலியார் குமாரத்தி, ஸ்ரீமதி அலமேலு அம்மாளின் வளையற் காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடை யளித்தது. ரூ. 0—8—0.

## திருச்சம்பள்ளி ரு. வே. துரைசாமி முதலியார் உள்ளூர் வசூல்

பிரஜோற்பத்தி௵ புரட்டாசி௴ 28௳ புஞ்சை. செ. கோவிந்தசாமி முதலியார் மனைவி ஸ்ரீமதி அங்காளம்மை அம்மாளுக்கு நடந்தேறிய வளையற் காப்பு முகூர்த்தத்தில் நன்கொடை யளித்தது. ரூ. 0—8—0.

ஷை ௵ புரட்டாசி௴ 15௳ திரு. இ. அண்ணாமலை முதலியார் தந்தையாரவர்களின் சிரார்த்தத்தில் நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடை யளித்தது. ரூ. 0—8—0.

ஷை ௵ கார்த்திகை௴ 14௳ திரு. மு. அருணாசல முதலியார் தந்தையாரவர்களின் சிரார்த்தத்தில் நன்கொடை யளித்தது. ரூ. 0—4—0.

ஷை ௵ ஷை ௴ 19௳ ரு. வே. துரைசாமி முதலியார் அன்னையாரின் சிரார்த்தத்தில் நன்கொடை யளித்தது. ரூ. 0—8—0.

நமது தலைச் சங்கத்துக்கும் கல்விநிதிக்கும் மனமுவந்து நன்கொடை வழங்கும் கொடையாளர்க்கும் அவற்றை வசூலித்தனுப்பும் குலச்சீலர்களுக்கும் எமது நன்றி என்றும் உரித்தாகுக.

Registered No. M. 1514

# சிறிது கவனிக்கலாகாதா?

இரங்கூன் சிங்கப்பூர் முதலிய வெளியூர்களுக்குச் செல்லும், அல்லது அவ்வூர்களிலிருந்து தம்மூர்களுக்குத் திரும்பும் நங்குலப் பிரமுகர்கள் அசௌகரியமின்றித் தங்குவதற்காகவும், வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வந்து கல்வி பயிலும் நல்குல மாணவர்கள் வசதியுடன் தங்கியிருப்பதற்காகவும் நமது தலைச்சங்கம் பத்திரிகை இவற்றின் காரியாலயங்கட்கு உதவுவதற்காகவும், ஒரு கட்டடம் இன்றியமையாததாயுள்ளதென்பதைப் பற்றிப் பன்முறை யெழுதியுள்ளோம். நமது தலைவர்களும் நங்குல மகாநாடுகளிலும் ஏனைய கூட்டங்களிலும் அதைப்பற்றி அழுத்தமாகப் பேசியுள்ளார்கள். அதற்குப் பொருளுதவி செய்யக்கூடிய முறைகளும் அத்தகைய கூட்டங்களில் விளக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்றாவது மகாநாட்டிலும் அதைப்பற்றிய தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேறியுள்ளது. ஆனால் என்ன கூறியும், எப்படி எழுதியும், எவ்வளவு வேண்டியும் நங்குலச் செல்வர்கள் இவ்விஷயத்தில் ஊக்கமெடுத்துக்கொள்ளாது வாளாவிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகவே யுள்ளது. மகாநாட்டுச் சமயம் சில கொடையாளர்கள் நன்கொடை வழங்கினார்களே யொழிய அதன் பின்னர் நன்கொடை வழங்க முன் வந்தவர் ஒருவரேனுமிலர். சென்ற மாதம் சேர்ந்தது நூறு ரூபாயேயாகும். அதுவும் இவ்விஷயத்திற்கு ஆதிகாரணர்களாகவும் இதில் மிகவும் ஊக்கங் கொண்டுள்ளவராகவுமுள்ள பாளையகாட் கம்பெனியாரா லளிக்கப்பட்ட மகமை நன்கொடையேயாகும். வருந்தத்தக்க விதமாக அந்த வசூலும் இம்மாதம் 85 ரூபாயாகக் குறைந்துவிட்டது. ஒரு கட்டடத்துக்குச் சுமார் 10,000 ரூபாயாவது வேண்டும் என்பதை அன்பர்க ளறிவார்கள். அவ்வாறிருக்க, இங்ஙனம் இரு கம்பெனியார் தரும் மகமைப் பணத்தைமட்டும் மாதமொருமுறை சேர்த்துக்கொண்டு போவோமானால் அந்தத் தொகை எக்காலத்தில் சேரும்? அது சமுத்திரத்தைத் தூர்ப்பதற்குக் கையால் மண் வாரிப் போடுவதுபோலவே யாகும்.

உதவி செய்ய வேண்டுமென நங்குலச் சீமான்கள் சிலர் மனம் வைப்பாராயின் சொற்ப மாதங்களுக்குள்ளேயே பத்தாயிரமல்ல, ஒரு லக்ஷத்தையும் சேர்த்துவிடலாம். வேடிக்கைகளுக்கும், களிக்கும் எத்தனையோ ஆயிரம் ரூபாய்கள் வாரி யிறைக்கப்படுகின்றன. பிரயோஜனப்படாத இடங்களில் ஒன்றுக்குமேலொன்றாகச் சத்திரங்களும் சாவடிகளும் கட்டப்பட்டுப் பாழடைந்து கிடக்கின்றன. அன்பர்களே! மிகவும் அத்தியாவசியமான இந்த நிதிக்குக் கைங்கரியம் செய்யலாகாதா?

இரங்கூன் முதலிய ஊர்களில் வியாபாரம் செய்யும் நங்குலப் பிரமுகர்களே இதைப்பற்றி வற்புறுத்திக் கூறியுள்ளன ராயினும், தற்போது அவர்களும் இது விஷயத்தில் வாளாவிருக்கின்றனர். நிலைமை யுணர்ந்து இனியேனும் நங்குலச் செல்வர்கள் இத்தருமத்திற்குத் தாராளமாக நன்கொடை வழங்க முன் வருவார்களென எதிர்பார்க்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| சென்ற மாதம் பாக்கிலிருந்தது | ரூ. 600 | 0 | 0 |
| இம்மாத வரவு:—மதராஸ் பாளையகாட் கம்பெனியார் வழங்கிய மகமை வசூல் | 60 | 0 | 0 |
| காஞ்சிபுரம் பாளையகாட் கம்பெனியார் வழங்கிய மகமை வசூல் | 25 | 0 | 0 |
| ஆக மொத்தம் பாக்கி யுள்ளது | 685 | 0 | 0 |

நன்கொடை யனுப்புவோர், "திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள், சென்னை பாளையகாட் கம்பெனி, 31, அரமனைக்காரன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை. என்ற விலாசத்துக் கனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswami at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.